வள்ளுவர் சொல்லமுதம் - 4

# ள்ளுவர்
# ல்லமுதம்




ழக வெளியீடு

வள்ளுவர்

# சொல்லமுதம்

நான்காம் புத்தகம்

கழக வெளியீடு: கஉச

# வள்ளுவர் சொல்லமுதம்

[நான்காம் புத்தகம்]

ஆசிரியர்:
வித்துவான், திருக்குறள்மணி, செஞ்சொற்புலவர்,
திரு. அ. க. நவநீதகிருட்டிணன்,
ம. தி. தா. இந்துக்கலாசாலை,
திருநெல்வேலி.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Feb., 1958.

# VALLUVAR SOLLAMUTHAM - IV

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHNATA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

*Head Office:*

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

# பதிப்புரை

வள்ளுவர், ஓர் அறிவூற்று. அவ்வூற்றில் ஊறிச் சுரந்த தேனீர் ஊற்றுக் கால்களே ஏனைய நூல்கள். வள்ளுவர் காட்டிய வழியே வழி; மற்றோர் வகுத்தன, காலத்தாற் படாரது செல்வனவாம். எனவே, வள்ளுவர் ஒருவரே புலவர். இதனானே, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது' நம் தமிழ்நாடு; தாய்நாடு. நம் தாய்நாடு, ஏனைய சேய் நாட்டிற்கும் இவரை உரிமை யாக்கிற்று.

அமிழ்து, நரை திரை மூப்பு பிணி நீக்கி உடற்குச் செம்மைதரும் அரிய மருந்து. வள்ளுவர் அருளிய திருக் குறட் சொல்லமிழ்து, உடற்கன்றி உயிரினது அறியாமைப் பிணிப்பு நீக்கி, அறிவொளி கான்றெழுதரும் காளாமணி விளக்கு. இதன் பெருமையை அக்காலத்து ஆன்றோரும், 'சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த இரு வினைக்கு மாமருந்து' எனப் போற்றுவாராயினர்.

இத்தகைய வள்ளுவர் வாய்மொழிக் கடலின் சொல்ல முதத்தை மொண்டு கொண்டெழுந்து அறிவு வானிலே நிற்கும் வித்துவான், திரு. அ. க. நவநீதகிருட்டிணன் என்னும் மாமேகம், உலகெலாம் பருகப் புத்தமிழ்தமாகப் பொழிந்துளது.

இதற்கு 'வள்ளுவர் சொல்லமுதம்' எனப் பெயரமைத்து நூலுருவாக்கி அவ் வான் அமிழ்தத் தலைப்பெயலாக முதல் மூன்று நூல்கள் முன்னரே வெளிவந்துள்ளன. அது போல் வழிப்பெயலாக இந் நான்காம் புத்தகமும் வெளிவரு கின்றது. இதனையும் அன்பர்கள் வாங்கிக் கற்றுப் பயன் பெறுவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# அணிந்துரை

திருவள்ளுவர் பெருமான் அருளிய திருக்குறள் ஒரு தெளிந்த நீரோடை. அஃது ஈரடி ஆழமுடையது போல் தோன்றுகிறது. ஆனால், அந்நீரோடையில் மூழ்குவார்க்கு ஆழத்தின் எல்லை அறிய முடியாத அருமையுடையதே யாகும். அதன்கண் ஆழ்ந்து மூழ்கிக் கூர்ந்து நோக்கினால் மணியும் பவளமும் அனைய கருத்துக் குவியல் கணக்கிறந்து நிறைந்து கிடப்பதைக் காணலாம்.

அத்தகைய கருத்து மணிகள் உளத்தைக் கவரும் உயர்வுடையனவாகவும், பிற ஆசிரியர்கள் விரித்துப் பேசும் கருத்தொளிகளையெல்லாம் தம்முள் அடக்கியொளிரும் செம்மையுடையனவாகவும் சிறந்து விளங்குகின்றன. அவற்றின் சிறப்பை ஓரளவு அறியும் பேறுபெற்ற எளியேனும் 'வள்ளுவர் சொல்லமுதம்' என்ற பெயருடன் மூன்று புத்தகங்களை ஆக்கினேன். இந்நூல் அவ்வரிசையில் நான்காவது புத்தகமாக வெளிவருவது. முன்னைய மூன்று புத்தகங்களையும் தமிழுலகம் வரவேற்றுப் போற்றிய மாண்பைக் கண்டு மகிழ்வுற்ற எளியேன் மீண்டும் அப்பணியை மேற்கொண்டு நான்காவது புத்தகத்தை நல்கியுள்ளேன். இதனையும் அங்ஙனமே ஏற்றுப் போற்றும் என்னும் உறுதியுடையேன்.

வள்ளுவர் சொல்லமுதைச் சமைப்பதில் எனக்குத் தளராத ஊக்கத்தைத் தந்து பேணிவரும் பெருநோக்குடைய கழக ஆட்சிப்பொறுப்பாளர் திருவாளர் வ. சுப்பையாப் பிள்ளையவர்கட்கு எனது இதயங் கலந்த நன்றியும் வணக்கமும் என்றும் உண்டு.

தமிழ் வேல்க!

அ. க. நவநீதகிருட்டிணன்

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| க. | துறவும் உணர்வும் | 1 |
| உ. | களவும் காமமும் | 12 |
| ௩. | நன்றியும் நடுவும் | 28 |
| ச. | பெண்மையும் திண்மையும் | 44 |
| ரு. | ஊழும் தாளும் | 60 |
| சா. | மடியும் மறதியும் | 72 |
| எ. | அமைச்சும் அங்கமும் | 82 |
| அ. | அரணும் உரனும் | 95 |

# வள்ளுவர் சொல்லமுதம்

## [நான்காம் புத்தகம்]

### க. துறவும் உணர்வும்

பொதுமறை அருளிய புலவர் பெருமானாகிய திருவள்ளுவர் தம் முப்பால் நூலுள் முதற்பாலாக வகுத்திருப்பது அறம். அவ்அறமே இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயக்கும் மொய்ம்புடைய தாகலின், அதனைப் பாயிரத்திலேயே வலியுறுத்தி உரைத்தருளினார். அறத்தை நடத்துவதற்குரிய வாழ்வுநெறிகளாக இல்லறம் துறவறம் என்னும் இரண்டையும் வகுத்துரைத்தார். அவற்றுள் இல் லறமே மேலானது என்பதையும் 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்று உறுதி தோன்றக் கூறினர்.

இல்லற இன்பங்களை ஆரத்துய்த்து அகன் றவனே துறவற வாழ்வைத் தூய்மையாகவும் வாய்மை யாகவும் நடத்த முடியும் என்பதை வலியுறுத்த இல் லறவியலை முதற்கண் சொல்லிப் பின்னர் அத்துற வறத்தை விளக்கியருளினர். துறந்தார் மிகவும் சிறந் தார் என்பதை விளக்கப் பாயிரத்திலேயே அவர் பெருமையைப் பேசியுள்ளார். பாயிரத்திலுள்ள நீத்தார் பெருமை என்னும் பகுதி துறவோர் சிறப்பைக் குறிப்பதாகுமன்றே !

துறவு நெறியை மேற்கொண்ட மேலோரைப் பல் பெயர்களால் குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர். நீத்தார், துறந்தார், அறம்பூண்டார், ஓரைந்தும் காப்பார், ஐந்தவித்தார், செயற்கரிய செய்வார், நிறைமொழிமாந்தர், குணமென்னும் குன்றேறி நின்றார், அந்தணர் முதலான பெயர்கள் அத்துறவோரின் திறனையும் தூய்மையையும் விளக்குவனவாகும்.

துறவறத்தைப் பதின்மூன்று அதிகாரங்களில் பரக்க விளக்கும் திருவள்ளுவர் அவற்றுள் துறவு என்றே ஓர் அதிகாரத்தையும் வகுத்துள்ளார். புறமாகிய செல்வத்திடத்தும் அகமாகிய யாக்கையிடத்தும் உள்ள பற்றினை அவற்றின் நிலையாமை நோக்கி விட்டொழித்தலே துறவு எனப்படும். ஆகவே, அகப்புறப் பற்றுக்கள் அறுவதற்கு இளமையும் யாக்கையும் வளமிகு செல்வமும் நிலையாமையுடையன என்பதை ஒருவன் இனிது உணரவேண்டும்.

துறவறத்தார் மேற்கொண்டு ஒழுக வேண்டிய நோன்புகள் ஒன்பது என்பர் திருவள்ளுவர். அவற்றைத் தனித்தனியே ஒவ்வோர் அதிகாரத்தால் செவ்வையுற விளக்கியுள்ளார். அருள், புலான் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம் தவிர்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை ஆகிய ஒன்பது பண்புகளும் துறவோர் கனவிலும் மறவாது கடைப்பிடிக்க வேண்டுவனவாகும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அருளைக் குறிப்பிட்டார் திருவள்ளுவர். துறவோர் உள்ளத்தில் அருள்வெள்ளம் பெருக்கெடுக்குமாயின் பிற பண்புகள் தாமே அமைந்து விடுவனவாகும். அதனாலேயே

அவர்களை 'அந்தணர் என்போர் அறவோர்' என்று குறித்தருளினர் திருவள்ளுவர்.

அருள் முதலான ஒன்பது நோன்புகளையும் மறவாது கொண்டொழுகும் துறவோர்க்கு மெய்ஞ்ஞானம் கைவரப் பெறும். அதற்கு நிலையாமை பற்றிய ஞானம் முதற்கண் கிட்டவேண்டும். இதனை நான்கு அதிகாரங்களால் வள்ளுவர் விளக்கியுள்ளார். நிலையாமையை விளக்கத் தலைப்பட்ட அப்புலவர், நிலையற்ற பொருள்களை நிலைபெற்றன என்று நினைக்கும் இழிந்த அறிவைக் கடிந்துரைத்தார். பின்னர்ச், செல்வம் நில்லாத இயல்புடையது; அது நல்வினையால் ஒருவனுக்கு வருமாயின் அப்பொழுதே நிலைபேறுடைய அறங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினர். நாடகத்தைக் காணுதற்கு நாடி வரும் மக்களைப் போன்றே ஒருவனுக்கு நல்வினை உளதாகும்வரை செல்வம் வந்து சேர்ந்துகொண்டே இருக்கும். அந்நல்வினை உலந்துவிட்டால் செல்வமும் அவனைவிட்டு அகன்றுவிடும் என்று குறித்தருளினர்.

அதன்பின் யாக்கை நிலையாமையை வலியுறுத்தினர். மக்கள், நாளை ஏதோ ஒருகால வரையறை என்று கருதுகின்றனர். அஃது அறியாமையன்றோ! ஒவ்வொரு நாளும் உயிரை அணுஅணுவாக, அறுத்துக் குறைத்துக் கொண்டிருக்கும் வாள் என்பதை அவர்கள் உணர்ந்தாலன்றோ இவ்யாக்கையின்மீது கொண்ட பற்று அகல்வதாகும் என்று விளக்கினர் திருவள்ளுவர். ஒருவன் நேற்று உயிரோடிருந்தான்; அவன் இன்று இறந்துபோனான் என்று எண்ணி வருந்தும் நிலையிலன்றோ மண்ணுலக வாழ்வு உள்ளது

என்று இரங்குகிறார் வள்ளுவர். முட்டைக்கும் பறவைக்குமுள்ள தொடர்பு போலவே உடம்பிற்கும் உயிருக்கும் தொடர்பு உளதாகும். பறவை முழு உருவம் பெற்றுப் பறக்கும் பருவம் உற்றுவிட்டால் முட்டையினின்று அது வெளிப்பட்டுவிடுகின்றதன்றோ! அது போலவே உயிர் ஓருடம்பில் வாழ்தற்கு வரையறுத்த காலம் முடிந்துவிடின் உடனே அவ்வுடம்பினின்று அகன்றுவிடும். உறங்கினான் ஒருவன் விழித்தெழாமல் நெடுந்துயில் கொண்டு விடுதலும் உண்டு. ஆதலின் சாக்காடு உறங்குவதைப் போன்றதேயாகும். இங்ஙனம் யாக்கை நிலையாமையைப் பலவாற்றான் விளக்கியருளினார் திருவள்ளுவர்.

இவ்இருவகை நிலையாமையை நன்கு உணர்ந்தவனே உலக இன்பங்களின்மேல் கொண்டுள்ள பற்றினைத் துறக்க முடியும். ஒருவன் தனது பற்றுக்குக் காரணமான பொருள்களில் ஒவ்வொன்றாக அதுபற்றிய நினைவை மனத்தினின்று நீக்கிக் கொண்டே வருவானாயின் அவைபற்றி உண்டாகும் துன்பங்களினின்று சிறிதுசிறிதாக விடுதலை பெறுவான் என்று விளக்கினார் திருவள்ளுவர். துறவுள்ளம் தோன்றுதற்கு வழி வகுக்கும் வள்ளுவர் சொல்லமுதம் உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உறு சுவை தருவதாகும்.

**'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.'**

என்பது அவர் வாய்மொழி.

இங்ஙனம் சிறிதுசிறிதாக எல்லாப் பொருள்களையும் ஒருவன் துறந்தால் அவனுக்கு இம்மையி

லேயே எண்ணிலாத இன்பங்கள் உண்டாகும். அவற்றைப்பெற விரும்பினுல் துறவு கொள்க என்று துறவறத்தில் விருப்பூட்டும் வள்ளுவர் வாய்மொழி வியப்பூட்டுவதாகும்.

'வேண்டி னுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.'

என்பது அவர் சொல்லமுதமாகும். துறவு நெறியில் சென்று விரைவில் வீடெய்த விரும்புவோர் ஐம்புல இன்பங்களையும் அறவே மறத்தலும் வெறுத்தலும் வேண்டும். பற்றுக்குக் காரணமாகும் யாதொரு பொருளும் அவரைப் பற்றியிருத்தல் கூடாது; ஏதேனும் ஒன்று உளதாயினும் மீண்டும் மயக்கைப் பெருக்கித் தவத்தைக் கெடுக்கும். பற்றை விளைக்கும் ஒரு பொருள் இருந்தாலே அது சார்பாக விட்டன வெல்லாம் ஒவ்வொன்ருக வந்து ஒட்டிக்கொள்ளும். ஆதலின், பிறவி யறுக்கும் பெருநோக்குடன் துறவு பூண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம் என்ருர் அவ் உயர் நாவலர்.

'மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்ருர்க் குடம்பும் மிகை.'

என்பது அவர் சொல்லமுதம்.

தானல்லாத உடம்பை யானென்று இயம்புதல் அகப்பற்ரும். தன்னேடு இயைபில்லாத பொருளை எனது என்று உரைத்தல் புறப்பற்ரும். இவ் இருவகைப் பற்றும் ஒருவனுக்கு மயக்கம் காரணமாகவே எழுவன. அம் மயக்கத்தைக் கெடுப்பதே தெளிந்த ஞானத்தை அடைதற்கு வழியாகும். அத்தகைய ஞானத்தைப் பெற்றவரே வானவர்க்கும்

எட்டாத வீட்டினை எட்டியடைந்தோராவர். இப் பற்றுக்களை விடாதாரைப் பிறவித் துன்பங்கள் இறுகப்பற்றி விடா. முற்றுந் துறந்த பெருமக்களே முத்தி வீட்டை எய்துவர். அதற்குப் பற்றுக் கோடாகப் பற்றற்ற பரம்பொருளை விரும்பி உள்ளத்தே கொள்ளுதல் வேண்டும். இறைவனே பற்றற்ற பழம்பொருள். சார்ந்ததன் வண்ணமாவது உயிர்க்கு இயல்பாதலின் அப் பரம்பொருளைப் பற்றினல் பிற பற்றுக்கள் தாமே அற்றொழியும் என்பர் நம் அரும்புலவர்.

'பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

பற்றனைத்தும் விட்டொழித்த துறவி யொருவன் கோவணம் ஒன்றைமட்டும் தனக்குப் பற்ருக வைத்திருந்தான். அதனை நாள்தோறும் எலி கறித்துச் செல்வதைக் கண்ணுற்ற அவன் அவ் எலியை அழித்தற்குப் பூனை யொன்றை வளர்க்கத் தொடங்கினன். அப் பூனைக்குப் பால் வேண்டுமே என்று பசுவொன்றனை வளர்க்கலானன். பசுவைக் காத்தற்குப் பணிப் பெண் ஒருத்தியை நியமித்தான். அவளை ஒழுங்காக வேலை வாங்குதற்கு மற்ருெரு பெண்ணைக் கொள்ள விழைந்தான். மீண்டும் முதலில் விட்டகன்ற இல்லறத்தையே பற்றிக்கொண்டான் என்று கதை யொன்று சொல்வதுண்டு. இதனல்தான் வள்ளுவர், பிறவியற முயலும் துறவோர்க்கு உடம்பும் மிகை யென்று உரைத்தருளினர்.

உறுதியான துறவு நெறியில் நிற்கும் உத்தமர், பெற்ருேர், மக்கள், குருக்கள், மாதர், இன்னுயிரன்ன

நண்பர், உதவி செய்தோர் ஆகிய அனைவரையும் துக்கந் தரும் தொடர்ச்சிகளென அறவே துறந்து விலகுவர். அவர்கள் அனைத்தையும் துறந்த பின்பு மிஞ்சியது வீடுபேறே என்று விளக்குவார் கவியரசராகிய கம்பர்.

> 'மக்களைக் குருக்கள் தம்மை
> மாதரை மற்று ளோரை
> ஒக்குமின் னுயிரன் னாரை
> உதவிசெய் தாரோ டொன்றத்
> துக்கமித் தொடர்ச்சி யென்று
> துறப்பரால் துணிவு பூண்டோர்
> மிக்கது நலனே யாகி
> வீடுபே றளிக்கு மன்றே.'

என்பது அவர் கவியமுதமாகும்.

மதியமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகர் உள்ளத்துறவு பூண்டு வள்ளற் பெருமானை நாடி நின்ற காலத்தில் ஊரும் பேரும் உற்றாரும் பெற்றாரும் கற்றாரும் கற்பனவும் ஆகிய பற்றையெல்லாம் வேண்டேன்! வேண்டேன்! என்று வெறுத்துரைத்தார். குற்றாலத்தில் உறையும் கூத்தப்பிரானது குரைகழற் சேவடி யொன்றே பற்றாகக் கொண்டு நின்றார். கன்றைப் பிரிந்த பசுவைப்போல் அதனையே பற்றிக் கசிந்துருகி நின்றார். அத்தகைய தமது துறவு நிலையைத் திருவாசகத்தில் அழகுற விளக்கியுள்ளார்.

> 'உற்றாரை யான் வேண்டேன்
> ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
> கற்றாரை யான்வேண்டேன்
> கற்பனவும் இனியமையும்

குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தா! உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.'

என்பது மணிவாசகரின் மதுர வாசகமாகும்.

இறைவன் திருவடியே பற்றுக்கோடாகக் கொண்டு, மற்றைய பற்றுக்கள் முற்றுந் துறந்த முனிவர் பெருமை அளவிறந்ததாகும். உலகில் பிறந்திறந்தாரை எண்ணி அளவிடுதல் இயலுமோ? அதுபோன்றே துறந்தார் பெருமையை அளந்தறிதல் இயலாது. அவர்கள் வீட்டுலகிற்கே வித்துப் போன்றவர்; பிறர் செய்தற்கு அரிய செயல்களைச் செய்ய வல்ல பெரியர். பிறரை வாழுமாறும் தாழு மாறும் நிறைமொழி சொல்லவல்ல மறைமொழி யாளர். துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின்மேல் நின்ற கொற்றத் தினர். ஓரறிவுயிர்க்கும் பேரருள் சுரக்கும் பெற்றியர். இங்ஙனம் துறவோர் சிறப்பினை அறிவுறுத்தினர் பெருநாவலர்.

இருள் நிறைந்த இடத்தில் சுடர் விளக்கை ஏற்றினால் உடனே அவ் இருள் அகல்வது இயல் பன்றோ! அஃதேபோல் உண்மைத் துறவு பூண் டாரை விட்டுப் பாவம் தானே விலகும் என்றார் ஒரு சமண முனிவர். 'தவத்தின்முன் நில்லாதாம் பாவம்' என்பது அவர் மொழியாகும்.

இத்தகைய துறவு நெறியில் நிலைத்து நின்றார்க்கே மெய்ப்பொருளைக் காணும் மேலான ஆற்றல் உளதாகும். அவ் ஆற்றலே மெய்யுணர்வு எனப்

படும். பிறப்பையும் அதற்குக் காரணமான மயக்கத்தையும் வீடுபேற்றையும் அதற்குக் காரணமான ஞானத்தையும் தெளிவாக உணரும் அறிவே மெய்யுணர்வு எனப்படுவது. இந்த மெய்யுணர்வுடையார்க்கே வீட்டின்பம் உளதாகும்.

மெய்யுணர்வுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர், எந்தப் பொருள் எவ் இயல்புடையதாகக் காணப்பட்டாலும் அத்தோற்றத்தைக் கண்டு விலக்காது, அப்பொருளின்கண் உளத்தையூன்றி அதன் உண்மை இயல்பைக் காண்பதே மெய்யுணர்வாகும் என்றார். மேலும் பிறப்பிற்கு முதற் காரணமாகிய மயக்கம் நீங்குதலும் வீட்டிற்குத் துணைக் காரணமாகிய இறையருளைப் பெறுவதும் அம்மெய்யுணர்வாகும் என்று வகுத்தருளினர்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு."

என்பது அவர் சொல்லமுதமாகும்.

மெய்ப்பொருளைக் காண்பதற்கு வள்ளுவர் ஒரு வழியைக் காட்டுகிறார். அனுபவம் முதிர்ந்த ஞான தேசிகர்பால் அறவுரைகளைப் பணிந்துநின்றுகேட்டல் வேண்டும். அங்ஙனம் கேட்ட அறவுரைகளின் பொருளை அளவைகளால் தெளிவுற ஆராயவேண்டும். அம்முறையாலேயே மெய்ப்பொருளை எளிதில் உணர முடியும். அங்ஙனம் முறையாக உணர்ந்தோர் மீண்டும் பிறவிக் கடலில் விழுந்து அழுந்தார் என்று விளக்கியருளினர் வள்ளுவர்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி."

என்பது அவர் சொல்லமுதமாகும்.

இத்தகைய மெய்யுணர்வைப் பெற்ற மேலான துறவோர்க்குக் காமம், வெகுளி, மயக்கம் என்னும் குற்றங்கள் மூன்றின் பெயருங்கூடத் தெரியாது கெட்டொழியும். அதனால் அவற்றின் காரியமாக உள்ள வினைப்பயன்கள் அவரைச் சாரமாட்டா என்று கூறியருளினர் பெருநாவலர்.

துறவின் சிறப்பை விளக்குதற்கென்றே தமிழில் பெருங்காவியம் ஒன்று பிறந்தது. சீத்தலைச் சாத்தனர் அருளிய மணிமேகலையே அக்காவியமாகும். அதனை 'மணிமேகலை துறவு' என்றே குறிப்பார் அப்பெரும் புலவர். அவர்தம் காவியத்தில் 'உலகில் பிறந்தோர் அனைவரும் பெருந்துன்பத்தையே பெறுவர்; பிறவாத பேறு பெற்றோரே பேரின்பத்தைக் காணுவர்; துன்பந்தரும் பிறப்போ பற்றுக் காரணமாக வருவது; அப்பற்றை முற்றுந் துறந்தோரே பிறவித் துயர் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவர்,' என்று குறித்தருளினர்.

> "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
> பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்ன(து)
> அற்றோ ருறுவ தறிக."

என்று துறவை வலியுறுத்தினர் அச் சாத்தனர்.

இத்தகைய உண்மைத் துறவு பூண்டு உயர்ந்த மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற ஞானியர் பலர் வாழ்ந்த நாடு நம் பாரதப் பொன்னாடு. அதனாலேயே தேசீய கவிஞராகிய பாரதியாரும்,

> "மாரத வீரர் மலிந்த நன்னாடு
> மாமுனிவோர்பலர் வாழ்ந்த பொன்னாடு."

என்று இந்நாட்டைப் போற்றினர். நம் தமிழகத்தின் தலைசிறந்த துறவியாகிய பட்டினத்தடிகளின் பெருமையைச் சுட்ட வந்த தாயுமானவர்,

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
யாரும் துறக்கை அரிதரிது."

என்று வியந்து பாராட்டினர்.

## உ. களவும் காமமும்

ஐம்பெருங் குற்றங்களுள் ஒன்றாகக் கொள்ளப் படுவது களவு. பிறருக்குரிய பொருளை அவர் அறியாமல் வஞ்சித்துக் கவர்ந்துகொள்ளும் செயலே களவெனப்படும். பிறர் பொருளைக் கொள்ளக் கருதும் தீய உள்ளத்தை வெஃகாமை என்னும் அதிகாரத்தால் வள்ளுவர் வன்மையாகக் கண்டித்தார். களவாடும் கொடுஞ்செயலைக் கள்ளாமை என்னும் அதிகாரத்தால் கண்டிக்கின்றார்.

பிறர்க்கு உரிய பொருளை ஒருவன் தான் பெற வேண்டும் என்று எண்ணுவதே நடுவுநிலையில்லாத செயலாகும். அங்ஙனம் பெறவிரும்பும் பிறர் பொருள் அறத்தின் வாயிலாக ஈட்டிய அரும்பொருளாக இருப்பின் அதனைக் கவர விரும்பியவன் குடியுடன் அடியோடு அழிவான். பிறர் கைப்பொருளைக் கவரும் கருத்து, ஒருவன் உளத்துத் தோன்றுமாயின் அன்றே அவன் செல்வம் அவனைவிட்டு அகலத் தொடங்கிவிடும். ஆதலின் அறிவுடையார் தாம் வறியவராயினும் அவ் வறுமையைப் போக்குதற்கும் பிறர் பொருளைக் கவர விரும்பார். விரும்புதலாகிய தீய எண்ணம், ஒருவனுக்கு இறுதியையே விளைக்கும் என்று விளக்கியருளினார் திருவள்ளுவர்.

பிறர் பொருளை அடைய விரும்பும் கொடுமையை இல்லறவியலில் விளக்கிய வள்ளுவர் களவால் விளையும் தீமையைத் துறவறவியலில் குறிப்பிடுகிறார். இதற்குரிய காரணம் யாதாகலாம்? இல்வாழ்வார் தம்மைச் சார்ந்தாரிடம் வஞ்சித்துக் கவர்தற்குரிய

பொருளை விளையாட்டாகக் களவாடினும் பிழையன்று. துறவோர் அதனைக் கருதினும் பெரியதோர் இழுக்காகும். ஆதலின் களவைத் துறவில் வைத்து வலியுறுத்தினர் வள்ளுவர்.

ஒருவன் உறவினருடனே பகைமை கொண்டு உயிரை நீக்கிக்கொள்ள நினைந்து முனைந்தான். பிறர் காணுவகையில் நஞ்சுண்டு இறப்பேன் என்று நெஞ்சில் உறுதி பூண்டான். அதற்காக நஞ்சையும் கூட்டித் தனியிடத்தே வைத்தான். அவனது மறைந்த செயலை உறவினன் ஒருவன் எங்ஙனமோ உணர்ந்துகொண்டான். அவன் அறியாமல் சென்று அந்நஞ்சை எடுத்துக் கொட்டிவிட்டான். நஞ்சுண்டு இறக்கத் துணிந்தவன் நஞ்சைத் தான் வைத்த இடத்தில் வந்து பார்த்தான். அதனைக் காணவில்லை. அதனால் அவன் இறவாது மீண்டான். அவ்வுறவினன் செய்த களவு, ஒருவன் உயிர் பிழைத்தற்குக் காரணமாயிற்று. இத்தகைய நன்மையை விளைக்கும் களவு, இல்லறத்தார்க்கே உரியதாகுமன்றித் துறந்தார் அதனைத் தம் தூய உள்ளத்தில் கருதலும் தகாததாகும். துறந்தார் ஞானத்திற்குக் காரணமாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டல்லாமல் அவனை வஞ்சித்துக்கொள்ளின் அதுவும் களவாகும்.

பிறரை வஞ்சித்துச் சிறுபொருளையும் கவரக் கருதாதவன் தவத்தோரால் தலைசிறந்த ஒழுக்கமுடையான் என்று மதிக்கப்படுவான். பிறன் ஒருவன் பொருளை அவன் அறியாத வகையில் வஞ்சித்துக் கவர்ந்துகொள்வோம் என்று நெஞ்சத்

தில் நினைப்பதும் பெருங்குற்றமாகும். களவால் ஒருவனுக்கு உளதாகிய பொருள் மேன்மேலும் வளர்வது போலத் தோன்றும். திடீரென்று அப்பொருள் தன் எல்லை கடந்து நில்லாது அழிந்துபோகும். அங்ஙனம் போகுங்கால் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் சேர்த்து உடன்கொண்டு போகும் தீமையுடையது.

இத்தகைய களவில் ஒருவன் பெருவேட்கையுடையனுயின் அது அந்தச் சமயத்தில் இனிது போலத்தோன்றலாம். ஆனுல் பயன்தரும் காலத்தில் அகலாத பெருந்துன்பத்தைத் தருவதாகும். களவில் விருப்புடைய கயவர் பிறர் சோர்வையே எதிர்நோக்கி நிற்பர். இத்தகைய வஞ்சகர் நெஞ்சத்தில் அன்போ அருளோ தோன்றுதற்கு இடமேயில்லை என்று குறித்தார் திருவள்ளுவர். அவர்கட்கு வீட்டை அடையும் ஞானநெறியில் நாட்டம் என்பது அணுவளவும் இராது. அவர்கள் மேற்கொண்ட களவு அவர்களது இருண்ட அறிவால் விளைந்தது. மயக்க அறிவுடையார்க்கு மாண்புடைய ஞானநெறியைக் காண்பதற்குக் காரணமேயில்லை அல்லவா!

களவை நன்கு பழகியவர் உள்ளத்தில் கரவு வேரூன்றிவிடும். ஞானநெறியில் பயின்ற நன்மக்கள் உள்ளத்தில் அறம் நிலைபெற்றுவிடுதல் போலக் கள்வர் உள்ளத்தில் கரவு குடிகொண்டு விடுகிறது என்று கூறுகிருர் நம் பேரறிவாளர்.

'அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும். இத்தீச் செயலில் பழகியவனுக்கு அறிவுடைய செயல் எதுவும்

தெரியாது. அவன் அக்களவினுலேயே அழிவைப் பெறுவான். அவனுடைய உயிர் எப்பொழுதும் அழிவுப் பாதையைநோக்கி ஊசலாடிக்கொண்டுதான் இருக்கும். களவைச் செய்யும் பொழுது பிறர் கையில் அகப்பட்டுக் கொண்டால் அரசால் ஒறுக்கப்படுவது உறுதியன்றோ! அவ்வொறுப்பும் பொறுக்கவொண்ணுத கொடுமையாக இருக்கும். இத்தகைய பெருந்துயருக்கு உள்ளாவான் கள்ளன் என்பதை வள்ளுவர்,

> 'கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
> தள்ளாது புத்தேள் உலகு.'

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். களவைக் கனவிலும் கருதாத பெருமக்களுக்கு விளையும் பெரும்பயனையும் ஒருங்கு குறித்தார் உயர் நாவலர். அவர்கட்கு வானவருலகம் தப்பாது வாய்க்கும்.

பிறர் பொருளை வஞ்சித்துக் கவர்தல் மட்டுமே களவெனப் படுவதன்று. கன்னம்வைத்தல், கொள்ளையிடுதல், செல்லாக் காசைப் பிறர்பால் சேர்த்தல், பொய்ச்சீட்டு எழுதுதல், கையூட்டுப் பெறுதல் ஆகிய இவை எல்லாமே களவின்பாற் படுவனவாகும். தெருவிலோ பிறிதோர் இடத்திலோ கண்டெடுத்த பொருளை உரியவர்பால் கொண்டு சேர்க்காது துய்த்தலும் களவே. ஒருவன் களவாடி வந்த பொருளைப் பிறன் வாங்குதலும் களவேயாகும். வாங்கிய கடனைக் கொடாது வஞ்சித்தாலும் அது களவுதான். பொருளாசையால் பொய் வழக்காடுவதும், அருளின்றித் தொழிலாளர் கூலியைக் குறைப்பதும், பிறர்க்கு நட்டம் விளைப்பதும், நம்பித்

தந்தவர் நற்பொருளைக் கவர்ந்து கொள்வதும், மிகுதி யான வட்டிப் பொருளைப் பெறுவதும், சூதாட்டத்தில் பொருள் சேர்ப்பதும், கொடுத்த வேலையைச் செம்மை யாகச் செய்யாது கூலியைப் பெறுவதும் ஆகிய இவைபோன்ற மறச்செயல்கள் அனைத்தும் கள வென்றே அறிவுடையோரால் கருதி இகழப்படும்.

களவுச் செயலால் உளதாகும் இழிவை வேத நாயகர் என்னும் நீதிமன்றத் தலைவர் நன்றாக விளக்கி யுள்ளார். ஒருவன் நீக்க முடியாத நெடும்பழியை உடையவனாக இருந்தாலும், மிகவும் இழிந்த குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் அவன் தன்னைக் கள்ளன் என்று பிறர்சொல்லப் பொறுக்கமாட்டான். அங் ஙனமாயின் களவால் விளையும் அவமானத்தை என் ன்பது! என்று இரங்கினர் அவ் வேதநாயகர்.

'தள்ள ரும்பெரும் பழியுளார்
என்னினும் தரையில்
எள்ளல் சேரிழி குலத்தரே
என்னினும் ஏசிக்
கள்ளர் என்றவர் பழித்திடப்
பொறுரெனிற் களவிற்(கு)
உள்ள பேரவ மானத்தை
உரைப்பதென் னுளமே!'

பது அவ்வேத நாயகரின் நீதிப்பாடலாகும்.

கள்ளரது உள்ளம் அச்சமே உருவானது. அவர் திருடுதற்கு அயல்மனையுட் புகுங்காலத்து அச்சத் னயே புகுவர். ஆங்குப் பொருளைத் திருடும் ரம் அவர்க்கு அச்சமே மிகுந்திருக்கும். கையில் த்த பொருளை எடுத்துக் கொண்டு வெளியில் படும்போதும் வீதியில் போகும்போதும் எவ

ரேனும் கண்டு கொள்வாரோ என்ற அச்சமே அவர்கள் அகத்தில் நிறைந்திருக்கும். களவால் வந்த பொருளைத் துய்க்கும்போதும் அவர்கட்கு மிக்க அச்சமே. இங்ஙனம் அச்சத்தால் அவலமுறும் தவறான செயலுக்கு மனம் துணியாவண்ணம் வாழும் வாழ்வுக்கு வரந்தருமாறு வேண்டினார் ஆண்டவனை நோக்கி வேதநாயகர் :

'அரந்தைகூ ழினும்பொன் வவ்வும்
அத்தொழிற் கியையா வண்ணம்
வரந்தர வேண்டு மென்னக்
கடவுளை வழுத்தாய் நெஞ்சே!'

என்பது அவர் நெஞ்சிற்குக் கூறும் நீதிமொழியாகும்.

ஒருவனுக்கு உரிமையான பொருள்கள் பலவற்றுள் தலைமை வாய்ந்த பொருள் மனைவியே. அத்தகைய பிறன் மனையாளை விரும்புவதும் பெருங் குற்றமே. அதுவும் களவின்பாற்பட்ட பிழையே யாகும். இதனைக் காமமயக்கம் என்பர் கற்றோர். ஒருவன் தன் மனைவியிடத்துக் கொள்ளும் காதல் விருப்பினை நேர்மையான காமமெனக் கூறுவர் சான்றோர். சிற்றின்ப வேட்கைப் பெருக்கால் சீர்கெட்டுச் செல்லும் காமக்கருத்தே தவறுடையதாக இகழப் படும். முற்றுந் துறந்த முனிவன் தான் மேற்கொண்ட துறவு நெறிக்குப் புறம்பாகக் காமவேட்கை கொள் வானாயின் அதுவும் மன்னிக்க முடியாத பெருங்குற்ற மாகும்.

இங்ஙனம் அறத்திற்குப் புறம்பான வரம்புமீறிய காமமயக்கினைத் திருவள்ளுவர் இல்லறத்தார்க்குப் பிறனில் விழையாமை என்ற அதிகாரத்திலும் துற

வறத்தார்க்குக் கூடாவொழுக்கம் என்ற அதிகாரத்திலும் கண்டித்துள்ளார். மனையறம் பூண்ட ஒருவன் தன் மனைவி இருக்கவும் நனிகாமத்தால் பிறனுக்குரிய பெருமனைக் கிழத்தியைக் காதலித்துச் செல்வது கழிபெரும் பேதைமையாகும். இத்தகைய அறியாமை, அறம்பொருள் பற்றிய நூல்களைத் திறம்பெற ஆய்ந்துணர்ந்த மக்கள்பால் என்றுமே உண்டாகாது. பிறன்மனை விரும்பும் பேதையரிடத்து அறமும் பொருளும் அறவே இலவாகும். காமம் காரணமாகப் பல்வகைப் பாவங்களுக்கு உள்ளாகும் மக்கள் உலகில் பலர். அவருள்ளே பிறன் இல்லாளைக் காதலித்த பேதையைப் போலும் பிறிதொரு பேதையை இம் மூதுலகில் காணுதல் அரிதெனக் குறித்தார் திருவள்ளுவர். காமமயக்கத்தினுல் பிறன் மனையுட் சென்று நின்றவன் அச்சத்தால் தான் கருதிய இன்பத்தையும் இழக்கின்ருனுதலின் அவனைப் போன்ற பேதையொருவன் இல்லை என்று குறித்தார்.

'அறன்கடை நின்ருரு ளெல்லாம் பிறன்கடை
நின்ருரிற் பேதையா ரில்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

பிறன் மனை விரும்பிய பேதையைத் துச்சாரி என இகழ்ந்துரைத்தார் ஒரு சமணமுனிவர். அவன் பிறனது மனைக்குள் புகும்போது மனமும் உடம்பும் ஒருங்கு நடுங்கும். ஆங்குப் பிறன் மனைவியுடன் இன்பம் துய்க்கும்போதும் எல்லையில்லாத அச்சமே பெருகும். மீண்டும் அம் மனையிலிருந்து வெளிவரும் போதும் நனிபேரச்சமே அவனை வாட்டும். அவன் தன்னைப் பிறர் கண்டுகொள்ளாதவாறு காப்பதினும்

அச்சமே விளையும். இங்ஙனம் எக்காலும் அச்சமே விளைக்கும் இழி செயலை ஒரு சிலர் ஏனோ விழைகின்றனர்? என்று இரங்குகிறார் ஒரு சமண முனிவர்.

'புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமல் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.'

என்பது அம் முனிவரின் உளங்கனிந்த மொழியாகும்.

ஒருவன் பிறன் மனையாளுடன் கூடி வருதலை மற்றையோர் கண்டால் மாறாத குடிப்பழி வந்து கூடுவதாகும். அப் பெண்ணுக்கு உரியவன் கண்ணிற் பட்டுக் கையகத்தும் அகப்பட்டுக் கொண்டால் காம மயக்கினால் பிறன் மனை நாடி வந்த அவன் கால்களைக் குறைத்துவிடுவான் அவன் மனையுள்ளே இன்பம் துய்க்குங்காலும் அச்சமே அளவிறந்து நிற்கும். அவனுக்கு மறுமையில் நிச்சயமாக நிரயத் துன்பம் உரியதாகும் என்று உரைத்தார் மற்றொரு சமண முனிவர்.

'காணிற் குடிப்பழியாம் கையுறிற் கால்குறையும்
மாணின்மை செய்யுங்கால் அச்சமாம்—நீணிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கெனைத்தாற் கூறு.'

என்று வினவுகிறார் அம் முனிவர்.

உண்மையான அன்புடையார் சிலர் தம் நண்பரைச் சிறந்த பண்புடையாராக நம்பித் தம் மனையுள் தாராளமாகப் பழக விடுவர். அப் பழக்க மிகுதியால் பண்பிலாத சிலர் அந் நண்பர்தம் மனைவியரைக் காதலித்து ஒழுகுவாராயின் அன்னார்

இன்னுயிருடையரேனும் இறந்தாரேயாவர் என மொழிந்தருளினர் நம் முதுபெரும் புலவர்.

'விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

காம மயக்கத்தால் தினையளவும் தமது பிழையை உணராது பிறனது மனைக்குட் புகுவாராயின் அவர் எத்துணைப் பெருமையுடையராயினும் சிறுமை யடைவது உறுதியே. செல்வத்தாலோ திறமையாலோ உடல் வலிமையாலோ பெருமையுற்றார்க்குப் பிறன் மனைவியை விரும்பிப் பெறுவது எளிதாக இருக்கலாம். அவர்கள் இவ் இழிசெயலில் இறங்குவாராயின் என்றும் நீங்காது நின்று ஓங்கும் குடிப்பழியைத் தேடிக்கொள்வர். அவர்களிடம் குடிப்பழியேயன்றிப் பகை பாவம் அச்சம் ஆகிய குற்றங்களெல்லாம் அகலாது நிற்பனவாகும்.

'பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.'

என்பது அதனை வலியுறுத்தும் வள்ளுவர் சொல்லமுதமாகும்.

பிறன் மனைவியைக் காம விருப்புடன் நோக்காதிருப்பதே பேரறம் என்று பேசுவார் நம் பெருநாவலர். அதனைப் பேராண்மை என்றும் பாராட்டுவார். அத்தகைய நல்ல பண்பினைச் சான்றோர்க்கு ஆன்றமைந்த அறமும் ஒழுக்கமும் என்று வியந்து போற்றுவார். உலகில் எல்லா நன்மைகளும் எய்துதற்குரியார் அவர்களே என்றும் அறுதியிட்டுரைப்பார் அப் பெரும்புலவர்.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்(கு)
அறனென்றோ ஆன்ற வொழுக்கு.'

என்பது அவர் சொல்லமுதமன்றோ !

பிறன் மனை நோக்கும் பேதையர்க்கு வேதநாயகர் ஓதும் நீதிமொழி உயர்ந்த உறுதிமொழியாகும். ஒருவன் தன் மனைவியைப் பிறனொருவன் காமக் கருத்துடன் நோக்குவானாயின் அவன் உள்ளத்தே கொடுங்கோபம் கொந்தளிக்குமன்றோ ! அஃதே போல் பிறன் மனைவியைத் தான் நோக்கினும் அத்தகைய சினம் அவனுக்கு எழும் என்பதை ஏன் உணராதிருக்கிறான் ! அங்ஙனம் உணர்வானாயின் அயலான் மனைவியை அன்னையென்றும் உடன் பிறந்தவள் என்று மன்றோ எண்ணுதல் வேண்டும் ! என்று அறிவுறுத்துவார் அவ் அறிஞர்.

'தன்னைப்போற் பிறரை எண்ணல்
தகுதியாந் தான் மணந்த
மின்னைப்போல் இடையினாளை
விழியினால் நோக்கு வாரைத்
தின்னல்போல் முனிவு கொள்வோன்
அயலவன் தேவி தன்னை
அன்னைசோ தரிபோல் எண்ணு(து)
அணைந்திட விரும்பல் என்னே !'

என்பது அவ் வேதநாயகரின் நீதிப் பாடலாகும்.

உலகில் சிலர் ஆண்தன்மை குறைந்து பெண் தன்மை மிக்க பேடிகளாகவும், பெண்தன்மை குறைந்து ஆண்தன்மை மிக்க அலிகளாகவும் இருக்கக் காண்கிறோம். அவர்கள் வாழ்வு அவலந் தரும் இழிவுடையதே. இம்மையில் அவர்கள் இங்ஙனம் பிறக்கக் காரணம் முன்னைப் பிறவியில்

பிறர் மனை விரும்பிய பெரும்பாவமே என்று மும்மை யும் உணர்ந்த முனிவர் ஒருவர் மொழிந்துள்ளார்.

‘செம்மையொன் றின்றிச் சிறியார் இனத்தராய்க்
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ—உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே இம்மை
அலியாகி யாடியுண் பார்.’

என்பது அச் சமணமுனிவரின் நாலடிப் பாடலாகும்.

வானவர் தலைவனாகிய இந்திரன், கௌதமன் மனையாளாகிய அகலிகை மாதை அடைய விரும்பி னான். அக் கௌதமனைப் போன்றே கோலம் தாங்கி நள்ளிருளில் அவன் இல்லம் புகுந்தான். அவ் அகலிகை நல்லாளுடன் இன்பம் துய்த்து அகலும் வேளையில் கௌதமன் கண்டுகொண்டான். அவன் தவம் வல்ல பெரு முனிவனாதலின் அவனது கொடிய சாபத்திற்கு உள்ளானான்.

இந்திராணியின் மீது கொண்ட எல்லையில்லாத காம விருப்பத்தால் நகுடன் பல்லக்கில் செல்லும் போது குறுமுனிவன் சாபத்தால் சர்ப்பமாயினான். சந்திரன் குரவன் மனைவியைக் கூடிய கொடும் பாவத் தால் பெருந் துயருக்கு உள்ளானான். இவற்றை யெல்லாம் வலியுறுத்துவார் போல வள்ளுவர்,

‘ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.’

என்று சொல்லி வைத்தார். இலங்கை வேந்தனாகிய இராவணன், இராமன் மனையாளாகிய சீதையை விரும்பிய பாதகத்தால் அப் பெருமானது கூரிய அம்புகளாலேயே மாண்டொழிந்த கதை, நந்தம் செந்தமிழில் காண்டற்கினிய காவியமாக அன்றோ விளங்குகின்றது!

இனி, இன்பத்தையெல்லாம் துறந்து தவநெறி யினை மேற்கொண்ட துறவோர் மனவுறுதியின்மை யால் தாம் விட்ட காம இன்பத்தைப் பின்னும் விரும்புவராயின் அதுவும் காமத்தின்பாற்பட்ட தீய வொழுக்கமே. அதனையே கூடாவொழுக்கமெனக் கடிந்து பேசினர் திருவள்ளுவர். துறவோன் தான் கொண்ட தவக்கோலத்திற்கு மாருக வஞ்சம் பொருந்திய மனத்தனுய்க் காம மயக்கம்கொண்டு மறைவாக மாதரை நாடி அலைவானுயின் உடம்பாக அவனுடன் கலந்திருக்கும் ஐந்து பூதங்களுமே தம்முள் நகைக்கும். கோலத்தால் மறைத்துக் கொண்ட அவனது சீலமற்ற தீயொழுக்கத்தைப் பிறர் அறியார் என்று அவன் நினைந்தாலும் அவனெடும் எங்கும் கலந்து பரந்திருக்கும் ஐம்பெரும் பூதங்கள் அவன் செயலுக்குத் தக்க சான்ருகும் என்பார் தமிழ்ப் பெரும்புலவர்.

> 'வஞ்ச மனத்தான் படிற்ருெழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

இத்தகைய வஞ்சகர்க்குக் குமரகுருபர அடிகளார் செஞ்சொல் அறிவுரையொன்று வழங்கியருளினர். அவர்களை மதியிலிகளே! என்று விருது சூட்டி விளித்துக்கொண்டார். நீங்கள் எல்லோரையும் உங்கள் தவக்கோலத்தால் ஏமாற்றிவிட்டோம் என்று எண்ணி மகிழாதீர்கள். எங்கும் கண்களாக நிறைந்து நின்று காணும் கடவுள் ஒருவன் உளன். அவனை வஞ்சிக்க எவராலும் இயலாது. மறைந்து செய்யும் எச்செயலையும் அவன் கண்டுகொண்டே இருக்கிருன். அந்த

உண்மையை அறிந்து உள்ளம் நடுங்கிக் கள்ளம் ஒழிவதே தெள்ளிய அறிவுடைமையாகும் என்று அறிவுறுத்தினர் அத் தெய்வக் கவிஞர்.

‘வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு.’

என்பது அவர் நீதிநெறி விளக்கம்.

துறந்தார் கொள்ளும் தூய தவக்கோலம் வான் போல் உயர்ந்த பெருங்கோலமாகும். அவர்கள் காம வயப்படுதல் கடுங்குற்றம் என்பதை நன்குகக் கண்டவர்கள். அங்ஙனம் அறிந்து வைத்தும் அவ் இழிசெயலுக்கு உளந்துணிவாராயின் அவர்களது பெருந்தவக்கோலத்தால் யாது பயன்? என்றார் வள்ளுவர். அவர்களது குற்றத்திற்குக் கழுவாய் இல்லை; எரிவாய் நரகத்து விழுதலே அதற்குத் தண்டனை என்று அறிவுறுத்தினர்.

‘புலி பசித்தாலும் புல்லைத் தின்னது’ என்பது பழமொழி. பசு தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பசும் பயிரை மேய விரும்பிற்று. அது பசும் பயிரை மேய்ந்தால் காவலர் காய்ந்து தடிகொண்டு தாக்கிக் கடிவர். அங்ஙனம் அவர் தாக்காவண்ணம் தன்னைக் காக்க எண்ணிய பசு தன்மீது புலித்தோலைப் போர்த்துச் சென்று பசும் பயிரை மேய்ந்தது. சேய்மையில் நின்று அதனைக் கண்ட காவலர் ஐயோ! புலியெனக் கதறி ஓடினர். மேலும் அது பயிரைத் தின்னது என்று எண்ணி அகன்றனர். பசுவோ தான் வேண்டுமளவும் அப் பயிரைத் தின்று சென்றது.

மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலிமையில்லாத ஒருவன் வலியுடைய தவத்தவர் கோலத்தைத் தாங்கினன். தவக்கோலத்தின் பெருமையால் அவனைப் பெரியோன் என்று நம்பினர் பிறர். அவன் அக்கோலத்துடன் மறைந்து பிறர்க்கு உரிய மகளிரை விரும்பிச் சென்றான். அவன் இல்லறத்தில் தனக்கு உரியவளாய் இருந்த இல்லாளையும் விட்டகன்றான். அத்தகையானது இழிசெயல் புலித்தோல் போர்த்த பசுவின் செயலுக்கு ஒப்பாயிற்று என்று உரைத்தார் ஒப்பில் புலவர்.

'வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

இங்ஙனம் தவக்கோலத்தால் ஒருவன் தன்னை மறைத்துக்கொண்டு தவமல்லாத அவச் செயலைச் செய்வானாயின் அது புதருள் மறைந்து புட்களைப் பிணிக்கும் புளிஞர் செயலுக்கு ஒப்பாகும். பிறர் நன்கு மதித்தற் பொருட்டுப் பெருமையான கோலத்துடன் முற்றுந் துறந்தோம் என்று மொழிவாரது மறைந்த ஒழுக்கம் அப்பொழுதைக்கு இன்பம் போலத் தோன்றலாம். ஆனல் பின்னர் அவர்களே, நாம் என்ன செய்தோம்! என்ன செய்தோம்! என்று எண்ணியெண்ணி இரங்குமாறு எண்ணற்ற துன்பங்களை உண்டு பண்ணும்.

உள்ளத்தில் உண்மையான துறவு கொள்ளாது, கள்ளத் துறவு பூண்டு கவினுறு தவக்கோலத்தால் இல்லறத்தாரை வஞ்சித்தொழுகும் புல்லர்களைப் போன்ற கொடியோர் இப் புவியில் பிறரில்லை.

இன்னோரைக் குன்றி மணியன்னார் என்று குறிப்பிட்டார் திருவள்ளுவர். குன்றிமணி புறமெல்லாம் செம்மையும் மூக்கில் மட்டும் கருமையும் கொண்டு இலங்குவது. அதைப் போன்று அகத்தே கருத்துப் புறத்தே வெளுத்திருக்கும் கள்ளத்துறவினர் பலர் உளர் என்று கண்டார் திருவள்ளுவர். அதனால்,

'புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.'

என்று மொழிந்தருளினார் அப் புலவர்.

நாகப் பாம்பு தன்னிடத்தே நஞ்சு இருப்பதை அறிந்து, தன்னைப் பிறர் காணின் கொன்றொழிப்பர் என்றெண்ணி மறைந்து வாழும் இயல்புடையது. நீரில் வாழும் பாம்பிடத்தே நஞ்சில்லையாதலின் அஃது அஞ்சாது புறத்தே செல்லும். அதனையும் விளையாட்டாகக் கல்லால் எறிந்து கொல்லும் சிறுவரும் உளர். கண்ணுக்கு இனிய காட்சி நல்கும் நாகப் பாம்பைப் போன்று நஞ்சனைய வஞ்சம் நிறைந்த நெஞ்சினராகிய பொய்த்தவர், தம்மைப் பொலிவுடைய தவக்கோலத்தால் அணிசெய்து நிற்பர். தூய உள்ளமுடையார் தம்மைத் தோற்றத்தால் மாற்றிக்கொள்ள விரும்பார். இந்த உண்மையை விளக்கும் தமிழ் மூதாட்டியாரின் அமுத மொழியைக் காணுங்கள்.

'நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.'

கரவுடையார், தம்மைக் காத்துக்கொள்ளப் புறக்கோலம் தாங்கிச் செல்லும் புன்மையைப் பலர்பால்

கண்ட புலவர் பெருமான், ஒருவனைத் தூயோன் என்றும் தீயோன் என்றும் பகுத்துணரக் கருவி யாவது உருவமன்று, அவரது செயலே என்று அறிவுறுத்தினர். அம்பு வடிவால் செவ்விதாயினும் செயலாற் கொடிதன்றோ! யாழ் கோட்டால் வளைந்த தாயினும் இசை நல்கும் செயலால் செவ்விதன்றோ! அவைகளைப் போன்றே ஒருவனது செயலைக்கொண்டு அவனது பெருமை சிறுமைகளைத் தெரிதல்வேண்டும் என்று தெரிவித்தருளினர் அத்தெய்வப் புலவர். பெருமைக்கும் சிறுமைக்கும் ஒருவரது கருமமே கட்டளைக்கல் என்று பின்னும் கட்டுரைப்பார் அப் புலவர். ஆதலின் தவம் செய்வார்க்குத் தனிப்பட்ட கோலம் வேண்டுவதன்று. அவர்கள் தலைமயிரை மழுங்கச் சிரைத்துக் கொள்ளவோ, நீண்ட சடையாக வளர்த்துக்கொள்ளவோ வேண்டுவதில்லை. உயர்ந் தோர் தவநெறிக்குத் தகாதெனை விலக்கிய தீயொழுக் கத்தை அகற்றிவிட்டாலே போதுமானதாகும்.

> 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்த தொழித்து விடின்.'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

## ௩. நன்றியும் நடுவும்

வள்ளுவர் தமது அறநூலுள் வகுத்துரைக்கும் அறங்கள் பலவற்றுள் நன்றி மறவாமையும் ஒன்ரு கும். இதனைச் செய்ந்நன்றியறிதல் என்னும் அதிகாரத்தால் சிறப்பாக விரித்துரைக்கிருர் அத் தெய்வப் புலவர். ஒருவன் தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாது பேணுதலே செய்ந்நன்றியறிதல் என்னும் சீரிய அறமாகும். இல்லறத்தில் வாழ்வார்க்கு உய்தியில்லாத பெருங்குற்றம் நன்றி மறத்தலே என்பர் நல்லறிஞர். ஆதலின், நன்றி பாராட்டும் நல்லறத்தின் மாண்பைச் சொல்ல வந்த வள்ளுவர், எத்தகைய அறத்தை அழித்தவர்க்கும் அப் பாவத்தி னின்று தப்புவதற்கு வழியுண்டு; ஆனல் செய்ந்நன்றி கொன்ற பாவத்தினின்று தப்புவதற்கு வழியேயில்லை என்று நன்கு வலியுறுத்தினர்.

> 'எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

என்பது அவர் சொல்லமுதமன்ரே!

இங்ஙனம் உலகப் பொதுமறை வலியுறுத்திய அறத்தின் மாண்பைக் கண்ட ஆலத்தூர்கிழார் என் னும் அருந்தமிழ்ப் புலவர் தாம் கிள்ளிவளவனுக்குச் சொல்லிய நல்லுரையில் அதனை அழகுற விளக்கி யுள்ளார். வள்ளுவக் கருவூலத்தில் காணும் குறள் மணியின் பேரொளி விளக்கமாகவே அப் புலவரது பாடல் அமைந்துள்ளது.

> 'ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
> மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்

> குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
> வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
> நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
> செய்தி கொன்றோர்க்(கு) உய்தி யில்லென
> அறம்பா டிற்றே ஆயிழை கணவ.'

என்பது அப் புலவரது பாடலின் ஒரு பகுதியாகும். பசுவின் மடியை அறுத்த பாவம், பெண்டிரது கருப்பத்தைச் சிதைத்த பெரும்பாவம், ஆசிரியர்க்குத் தீங்கிழைத்த அரும்பாவம் போன்ற கொடிய தீவினைகளைப் போக்கிக்கொள்ளுதற்குப் பொருந்திய வழிகள் உளவெனப் புகல்வர் ஆன்றோர். ஆனால் நிலமே தலைகீழாக மாறினாலும் ஒருவன் செய்த நன்றியை மறந்தவர்க்கு நரகம் உறுதியாகும். அதனின்று தப்புதற்கு வழியே இல்லை என்று அறநூல் அறுதியிட்டு உரைத்தது என்று அறிவுரை வழங்கினார் ஆலத்தூர்கிழார்.

சங்க காலப் புலவராகிய ஆலத்தூர்கிழார் காலத்திலேயே அறநூல் என்று தலைக்கொண்டு போற்றிய தனிப் பெருநூல் திருக்குறள் ஒன்றே என்பதை அவர் வாய்மொழியால் கண்டுணரலாம்.

> 'செய்தி கொன்றோர்க்(கு) உய்தி யில்லென
> அறம் பாடிற்றே.'

என்று வலியுறுத்தும் அப் புலவர், வள்ளுவர் சொல்லமுதத்தை அறம் என்றே குறிப்பிடும் திறம் எண்ணியெண்ணி இன்புறுதற்குரியதாகும்.

'நன்றி மறவேல்' என்பது நம் தமிழ் மூதாட்டியாரின் அமுதமொழி. அவர் இக் கருத்து இளைஞர் உள்ளத்தும் எளிதில் பதியுமாறு இரு சொற்களால்

சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார். இதனையே வள்ளுவர் சிறிது விளக்கத்துடன், 'நன்றி மறப்பது நன்றன்று' என்று நவின்றருளினர். அத்துடன் பிறர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்துவிடுதலும் நன்று என்று குறித்தருளினர். 'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்பது அவர் சொல்லமுதம்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது நம் நாட்டுப் பழமொழி. உப்பு மிகவும் அற்பமான பொருளே. எனினும் பருகும் கூழுக்கு உறுசுவை தரவல்ல அவ் உப்பின்றேல் அக்கூழ் குடித்தற்குத் தகுதியின்றிப் பாழாய்ப் போய்விடும். உப்பில்லாப் பண்டத்தைக் குப்பையில் கொட்டுங்கள்! என்று தானே இப்புவி மக்கள் எப்பொழுதும் செப்புவர். அங்ஙனம் சுவையூட்டும் உப்பை ஒருசிறிது உதவி னோரையும் ஒருவன் தனது வாழ்நாள் முழுதும் மறவாது எண்ணுதல்வேண்டுமெனின் அறுசுவை உணவை ஊட்டினேரை எங்ஙனம் போற்றுதல் வேண்டும்! அதனல்தான் மணிமேகலை ஆசிரியர்,

> 'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.'

என்று மனமாரப் போற்றினர்.

சான்றோர் கைம்மாறு கருதாது பிறர்க்கு உதவு தலைத் தமது பெருங்கடனகக் கருதுவர். அவர்கள் மாரியனைய மாண்பினர். பிறர் தமக்கு ஏதும் நன்மை செய்யாதிருக்கவும் அவர்கள் பிறர்க்கு நன்மை செய்துகொண்டேயிருப்பர். அதனல் அவர்கட்கு எத்தனை துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றைச்

சிறிதும் பொருட்படுத்தமாட்டார்கள். அத்தகையார் செய்யும் உதவிக்கு மண்ணையும் விண்ணையும் கைம் மாறாக வழங்கினாலும் ஈடுசெய்ய ஒண்ணுமோ என்று உரைப்பார் திருவள்ளுவர்.

ஒருவனுக்கு உயிர் நீங்கும் இறுதி எல்லையில் ஒரு சிறு உதவியைச் செய்தால் அவன் உயிர் காக்கப் படும். அத்தகைய நிலையில் வேண்டுவதாகிய சிற்றுதவியை ஒருவன் செய்தான். அந்த உதவி மிகச் சிறியதேயாயினும் காலத்தைநோக்க, ஞாலத் தினும் மிகப் பெரிது என்றார் அம்மேதகு புலவர். ஒருவனுக்கு உதவி செய்பவன், இவனுக்கு இது செய்தால் நமக்கு இன்ன பயன் விளையும் என்று எண்ணிப் பார்த்து உதவுதல் தகாது. அத்தகைய ஆய்வின்றிச் செய்த உதவியின் நலம், கடலைக் காட்டினும் பெரிதாகும் என்று கட்டுரைத்தார் தெய்வப்புலவர். இக் கருத்துக்களை விளக்கும் அவரது,

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.'

'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.'

என்னும் வாய்மொழிகள் நன்றியின் நலத்தை நன்கு புலப்படுத்துவனவாகும்.

சுவையான பண்டங்களை நாவிற்கு எடுத்து நல்கும் கை, தன்னை அந்நாப் புகழும் என்று எண்ணுவதில்லையன்றோ! தென்னை மரத்தின் அடி யில் அங்கணத்து நீரைப் பாய்ச்சினாலும் அஃது அருஞ்சுவை இளநீரைத் தலையால் தாங்கித் தந்துதவும் செயலைக் கண்ணாரக் காணுகின்றோம். இக் காட்சியை

நாள்தோறும் காணுகின்ற வாய்ப்பைப் பெற்றாலுங் கூடப் பெரும்பாலான மக்கள்,

> 'நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல்.'

எனவே எண்ணிப் பிறர்க்கு உதவ மறுக்கின்றனர். அத்தகைய இழிந்த மக்களுக்கு இடித்துரைக்க வந்த தமிழ் மூதாட்டியார், ஒருவனுக்கு நீ உதவி செய்தால் மீண்டும் அவன் நமக்கு உதவுவானோ, மாட்டானோ என்று எண்ணவே செய்யாதே; உறுதியாக நினக்கு மனக்கினிய நன்மைகள் வந்துறும்; அதற்குச் சான்று, இதோ தோன்றும் தென்னை மரமே; அது தாளுண்ட நீரைத் தலையாலே தண்ணிய இளநீராக்கித் தருவதைப்பார்! என்று பிறர்க்கு உதவும் பேரறத்தை விளக்கியருளினர்.

> 'நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
> தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான்தருத லால்.'

என்பது அத் தமிழ்ச் செல்வியாரின் மூதுரை.

பிறர் செய்த உதவியின் பயனை அளந்தறிவார் உலகில் அரியர். பயன் தெரியும் பண்புடைய நன்மக்களுக்கு நன்றியொன்று செய்தால் அது தினையளவினதாயினும் பனையளவினதாக மதித்துப் பாராட்டுவர். அப் பயனை அறியாத கயவர்க்குப் பனையளவு பேருதவியைப் புரிந்தாலும் இவர் யாது செய்தனர் என்றே இகழ்வர். இக் கருத்தை விளக்கும்,

> 'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்தெரி வார்.'

என்னும் வள்ளுவர் சொல்லமுதச் சுவையினை அள்ளிப்பருகிக் கண்ட சமணமுனிவர் ஒருவர், நன்றியின் பயனறியாத புல்லர் இயல்பையும் சேர்த்துச் சொல்லினர்.

'தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்றோர்—பனையனைத்(து)
என்றும் செயினும் இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு.'

என்பது அவரது நாலடிப் பாடலாகும்.

இன்பத்தில் பங்குகொள்ள எத்துணையோ மக்கள் விரைந்து வந்து கூடுவர். துன்பத்தில் பங்குகொள்ளவோ, அதனைத் துணையாக நின்று போக்கவோ, அதனின்று காக்கவோ முற்படுவார் இம் மூதுலகில் மிகவும் அரியர். ஆதலின் துன்பக் காலத்துப் பற்றுக்கோடாயிருந்து துயர்போக்கிய நல்லோரை எந்நாளும் துறவாதொழிக என்று அறிவுரை வழங்கினர் பெருநாவலர். மாசற்ற மனத்தினரே அத் துயர் துடைக்கும் தூயோராதலின் அவரது நட்பையும் மறவற்க என்று வலியுறுத்தினர். நல்லோர் அன்னவர் நட்பினை எந்நாளும் எண்ணி இன்புறுவதோடல்லாமல் எழு பிறப்பும் தொடர்ந்துவரும் உழுவலன்பராக அவர்களை உளத்தில் கொண்டு மகிழ்வர்.

இக் கருத்தை வலியுறுத்த வந்த தமிழ் மூதாட்டியார், நல்லோர்க்குச் செய்த உதவி, கல்மேல் எழுதிய எழுத்துப்போல் என்றும் அவர் உள்ளத்து மறையாது நின்று நிலவும்; பொல்லார்க்குச் செய்த பேருதவியும் நீர்மேல் எழுதிய எழுத்துப்போல் செய்த அப்பொழுதே அவர் உளத்தைவிட்டு அகலும் என்று உரைத்தருளினர்.

'நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.'

என்பது அவர் அமுதமொழியாகும்.

ஒருவன் தனக்கு உதவிசெய்த மற்றொருவனுக்குக் கைம்மாறு செய்யக் கருதுகிறான். அக்கைம்மாற்றினை என்ன அளவினதாகச் செய்வது என்று ஐயுறுவார் சிலர் உளர்போலும். அவர்கட்கு வழிகாட்டுவார் போன்று வள்ளுவர் ஒரு பாவை வகுத்தருளினர்.

'உதவி வரைத்தன்(று) உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.'

என்பது அவர் சொல்லமுதமாகும். உதவி செய்தவன் மிகவும் எளியனாயினும், அவன் செய்த உதவி மிகவும் எளியதாயினும், அதனைப் பெற்றுக் கொண்டவன் எத்தகைய தகுதியுடையானோ அதற்கேற்ப அவனது கைம்மாறு அமைதல்வேண்டும் என்று அறிவுறுத்தினர் திருவள்ளுவர்.

'தான்சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.'

என்பார் ஒரு சமணமுனிவர். ஆதலின் உயர்ந்தவர்க்கு உதவிய உதவி மிகச் சிறிதாயினும் மிகப் பெரிதாக மதிக்கப்பட்டு, அஃது உதவினர்க்குப் பெரும் பயன் விளைக்கும் என்று விளக்கினர் அம்முனிவர்.

ஒருகால் ஒருவனுக்கு நன்மை செய்தவன் பிறிதொருகால் எக்காரணத்தாலோ தீமை செய்கிறான். அத்தீமையும் கொலை செய்தாற் போன்ற கொடுமை

வாய்ந்ததாக இருக்கிறது. அத்தகைய தீங்கிழைக்கும், முன்பு நன்கிழைத்தானை யாது செய்வது? உதவி செய்தவனே எனினும் உயிருக்கே உலைவைக்கும் அவ்உன்மத்தனை வாளா விடுவதா? இவ்வினாக்களுக்கு வள்ளுவர் சொல்லும் விடையினை நோக்குக.

> 'கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
> ஒன்றுநன் றுள்ளக் கெடும்.'

என்பது அவர் சொல்லமுதம். உதவியைப் பெற்றவன் உத்தமப் பண்புடையவனெனின் அவ் உதவியின் பயனை உய்த்துணர்ந்து ஒன்று நூறாகக் கொண்டு உள்ளத்தே மறவாது போற்றியிருப்பான். அங்ஙனமாயின் அவ்உதவி செய்தவன் செய்யும் கொலை போன்ற கொடுந்துன்பமும் அத்துணைப் பெரிதாக அவனால் மதிக்கப்படாது மறக்கப்படும்.

இதனை விளக்கவந்த நாலடியார், சான்றோர்க்கு நன்றியொன்று செய்தார் பின்றை நாளில் பிழை நூறு செய்தாலும் பேணிப் பொறுப்பர்; கயவர்க்கு எழுநூறு நன்றி செய்துவிட்டு மறதியான் ஒருதீது புரியினும் அவ்எழுநூறும் தீயனவாக மாறிவிடும் என்று கூறியது.

> 'ஒருநன்றி செய்தவர்க்(கு) ஒன்றியெழுந்த
> பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்(கு)
> எழுநூறு நன்றிசெய்(து) ஒன்றுதீ தாயின்
> எழுநூறும் தீதாய் விடும்.'

என்பது அந்நாலடியார்ப் பாடல்.

தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய நன்றியைப் பற்றியும் அம்மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவியைப் பற்றியும் வள்ளுவர் தம்நூலுள் சொல்லி

யுள்ளார். கற்றவர் நிரம்பிய பேரவைக்கண் மற்றவர் மதிக்கும் மாண்புடையவனாக ஆக்கிவைக்க வேண்டுவதே தந்தை மகற்கு ஆற்றும் நன்றி என்று அருளிச்செய்தார் பெருநாவலர். அத்தகைய நன்மையைச் செய்த தந்தைக்கு மகன் செய்யவேண்டிய கைம்மாறும் ஒன்றுண்டு. அதனை, இந்நன்மகனைப் பெறுதற்கு இவன் தந்தை முந்தைநாளில் என்ன தவம் செய்தானோ! என்று கண்டவர் கேட்டவர் எல்லாரும் வியந்து நயந்து போற்றுமாறு சான்றோனாக விளங்கவேண்டும் என்று குறித்தார் அப்புலவர்.

ஒருவனுக்கு உடம்பையும் உயிரையும் உலக வாழ்வையும் உருவாக்கி உதவும் பெருமை அவனது பெற்றோர்க்கு உரியது. அப்பெற்றோர்க்கு மக்களாவார் செய்யத்தக்க கைம்மாறும் உள்ளதோ! என்று கேட்பார் வேதநாயகர்.

'சின்னவோர் பொருள்தந் தோரைச்
சீவனுள் ளளவும் உள்ளத்(து)
உன்னவே வேண்டும் என்ன
உரைத்தனர் பெரியோர் தேகம்
தன்னையா ருயிரைச் சீரார்
தரணியின் வாழ்வைத் தந்த
அன்னைதந் தையர்க்குச் செய்யும்
அருங்கைம்மா றுளதோ அம்மா!'

என்பது வேதநாயகரின் நீதிநூற் பாடல்.

பழந்தமிழ்ப் புலவர்கள் அனைவரும் செய்ந்நன்றி மறவாத சீரிய பண்பினர். அவர்கள் தம்மை ஆதரித்த வள்ளற் பெருமக்களைத் தெள்ளிய தீஞ்சுவைப் பாக்களால் பாடிப்பாடி நன்றி பாராட்டினர்; அவ்வள்ளல்களின் புகழை வையமெங்கும் பரப்பி மகிழ்ந்

தனர். அப் புலவர் பெருமக்களின் நன்றியுணர்ச்சியால் தோன்றிய பாக்களின் கோவைகளே பழந் தமிழ் நூல்கள். பிற்காலத்தும் கவியரசராகிய கம்பர் தம்மை ஆதரித்துக் காத்த வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் சிறப்பைத் தம் காவியமாகிய இராமாயணத்தில் ஆயிரம் பாக்களுக்கு ஒருமுறை விருப்புடன் குறிப்பிடுகின்றாரன்றோ! அவரே தமது காவியத்தில் நன்றி மறத்தலாகிய பாவத்தின் கொடுமையை நன்கு குறிப்பிடுகின்றார். தாய், தந்தை, ஆசிரியன், அந்தணாளர், பசு, பாலர், பத்தினிப் பெண்டிர் ஆகிய இவரையெல்லாம் கொன்றார்க்கும் கழுவாயுண்டு. ஆனல் ஒருவன் செய்த நன்றி கொன்றவனுக்கு அப்பாவத்தை ஒழிக்கும் உபாயமே இன்றாகும் என்று குறிக்கின்றார்.

'சிதைவகல் காதல் தாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை ஆவைப்
பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டாம்
மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றார்க்குஎன் றேனும்
ஒழிக்கலாம் உபாயம் உண்டோ ?'

என்பது கம்பரது வாக்கு.

பசியால் மெலிந்து நடையால் தளர்ந்து சென்ற தமிழ்மூதாட்டியார்க்குக் கல்வியறிவு கடுகளவும் பெறாத ஆயர் குலச்சிறுவன் ஒருவன், தனக்கு வைத்திருந்த கூழைத் தந்து அவரது பசித்தீப் பற்றிய வயிற்றைக் குளிர்வித்தான். உடனே, அச்சிறுவன் காலத்தால் செய்த நன்றியைப் பாராட்டிக் கன்னித்

தமிழ்நூல் ஒன்றைப் பாடிவிட்டார் அம்மூதாட்டியார். அதுதான் அசதிக் கோவை என்னும் நன்றிக் காப்பியம். தனது பெயரையும் அசதியால் மறந்து விட்டேன் என்று கூறிய அவ் ஆயர்குலத்து இளைஞனை இகழாது, அவன் பசித்தீ மாற்றிய நன்றியை நாவாரப் புகழ்ந்து,

'அற்றாரைத் தாங்கும் ஐவேல் அசதி.'

என்று பாடியருளிய பைந்தமிழ்ச் செல்வியாரின் நன்றியுணர்ச்சியை என்னென்பது!

உலகில் பலர் தமக்கு நன்றி செய்தார்க்கு இரங்கிப் பேசும் இயல்பைக் காண்கிறோம். அன்னார் பிறர்க்குத் தீங்கு இழைப்பராயின் அவர் செய்தது பிழையென நடுவுநிலை பிறழாது எடுத்துரைப்பார் அரியர். தமக்குச் செய்த நன்றி ஒன்றனுக்காகப் பிறருக்கு இழைக்கும் பிழைகள் நூற்றினையும் பிழையென்று பேசாத பெருமக்கள் சான்றோர் ஆகார். பகைவராயினும் நண்பராயினும் அயலவ ராயினும் வேறு எத்திறத்தவராயினும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலையே நடுவுநிலைமையெனப் படும். இந்நடுவுநிலை பிறழாத நல்லியல்பைச் சான் றோர்க்கு அணியெனச் சாற்றினார் வள்ளுவர்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

துலாக்கோல் தன்பால் பாரம் வைத்தற்கு முன் னர்ச் சமனாக நிற்கிறது. பின்னர்த் தன்கண் வைத்த பாரத்தை வரையறுத்துக் காட்டுகிறது. அதைப்

போல் ஒருபாற் கோடாத உயர்பண்பே நடுவுநிலை எனப்பட்டது. சான்றோர் பிறரது குறைநிறைகளைத் தடைவிடைகளால் கேட்டு முறையே உள்ளவாறு உணர்தல் வேண்டும். தாம் உணர்ந்தவற்றை மறையாது பகைவர், அயலார், நண்பர் என்ற கருத்து வேறுபாடின்றி முத்திறத்தார்க்கும் ஒப்பக் கூற வேண்டும். இங்ஙனம் துலாக்கோலுடன் ஒப்புமைப் படுத்தி நடுவுநிலைமையை விளக்கி யருளினார் ஒப்பில் புலவர்.

பட்டினப்பாலை பாடிய பைந்தமிழ்ப் புலவராகிய உருத்திரங்கண்ணனார், காவிரிப்பூம் பட்டினத்துப் பண்டு வாழ்ந்த வணிகரின் நடுவுநிலைமையை விளக்க நல்லதோர் உவமையை எடுத்தாண்டுள்ளார்.

'நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்.'

என்பது அப்புலவரின் அரிய மொழியாகும். இதில் நுகத்தடியின் நடுவிடம்போல நடுவுநிலை பிறழாத நன்னெஞ்சமுடையார் அந்நகரத்து வணிக மக்கள் என்று குறித்தார். உழவுக் கலப்பையுடன் இணைக்கப்படும் நுகத்தடி நேரான நடுவிடத்தே இணைக்கப் பெறாவிடின் ஏரில் பூட்டிய மாடுகள் சீராகச் செல்ல மாட்டா. அதுபோலவே நடுவுநிலை பிறழ்ந்த வணிகரின் வாணிகமும் வளம்பெற்று ஓங்காது தளர்ந்து விடும் என்று குறித்தார் உருத்திரங்கண்ணனார்.

நடுவுநிலை தவறாத நல்லறத்தின் மாண்பை மிகவும் நயம்பட வலியுறுத்தினார் வள்ளுவர். இவ் அறத்தின் வழுவாது ஒழுகும் இயல்பு, எவர்க்கும் எளிதில் அமைவதன்று. ஆதலின் அவ்வறம்

ஒருவன்பால் இனிது அமைந்துவிட்டால் அஃது ஒன்றே போதுமானது என்று புகன்றருளினர் நம் பொய்யில் புலவர்.

'தகுதி யெனஒன்று நன்றே பகுதியாற்
பாற்பட்(டு) ஒழுகப் பெறின்.'

என்பது அவர் சொல்லமுதமாகும். இத்தகைய நடுவு நிலையுடையாரைத் தக்கார் என்று குறிப்பிட்டார் தமிழ்நாவலர். மேலும் இவ் அறத்தைச் செப்பம் என்றும் குறித்தருளினர்.

செப்பமாகிய நடுவுநிலைமைக்கு வள்ளுவர் வகுக்கும் இலக்கணம் யாது? சொல்லிலே கோணல் இல்லாமல் நிற்பதே நிடுவுநிலைமையாகும். சொற்கோணல் இல்லாதிருக்க உள்ளம் கோணுதிருக்கவேண்டும். உள்ளத்தில் நேர்மை திட்பமாக நிலவுதல் வேண்டும். அப்பொழுதுதான் சொற்கோட்டம் இல்லாத செப்பம் திட்பமாகப் புலப்படும்.

'சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.'

என்பது நடுவுநிலைக்கு இலக்கணம் வகுக்கும் வள்ளுவர் சொல்லமுதமாகும்.

நடுவுநிலை பிறழாத நல்லோர் அறத்தின் வழுவாத வல்லோராவர். அவர்கள் செல்வம் அறவாயிலாக ஈட்டப்பெற்றது. ஆதலின் அச்செல்வம் பிறர் செல்வம்போல் அழிவதன்று. எனவே அவர்தம் வழித்தோன்றுவார்க்கும் வலியாக நின்று உதவும் அச்செல்வம். ஆகையால் நடுவுநிலை தவறுவதால் பெறும் செல்வம் நன்மையே தருவதாக இருந்தாலும் அது வரத் துவங்கும் அப்பொழுதே ஒழியவிடுக

என்று அறவுரை வழங்கினார் வள்ளுவர். மேலும் நடுவு நிலையுடையார்க்கே நன்மக்கட்பேறு வாய்ப்பதாகும். அம் மக்களின் நன்மை தீமைகளைக் கொண்டே பெற்றோரின் தகுதிப்பாட்டைப் பெரிதும் தெரிந்து கொள்ளலாம் என்றார் தெய்வப்புலவர். 'மகன் உரைக்கும் தந்தை நலத்தை', 'மகனறிவு தந்தையறிவு' என்னும் பழமொழிகள் அக்கருத்தை நன்கு வலியுறுத்தி நிற்பனவாகும்.

நேர்மையாக நடந்து என்ன சீர்மையினை எய்திவிட்டோம் என்று நெஞ்சத்துக் கரவுகொள்வார் உலகில் பலர். அவர்க்கு நல்ல அறிவுரை சொல்லுகின்றார் வள்ளுவர் பெருமான். ஒருவன் இம்மையில் கேடும் நலமும் எய்துவதற்குக் காரணமாவன முன்னை வினைகள். அந்த உண்மையை உணராத புன்மையாளரே, நாம் நேர்மையாக நடந்தும் நன்மை கண்டோமில்லையே என்று அவ்வறத்தைப் பழித்துரைப்பர். இங்ஙனம் எண்ணிய இழிந்த நினைவால் ஒருவன் நடுவுநிலை தவறி நேர்மையற்ற தீமை வினைகளைச் செய்ய முனைவானாயின் அம் முனைப்பு அவன் அழிவைக் காட்டும் அறிகுறி யென்று குறித்தார் வள்ளுவர். 'கெடுவான் கேடு நினைப்பான்', 'கேடு வரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே' என்பன நம் ஆன்றோர் அனுபவ மொழிகளன்றோ!

நடுவுநிலை பிறழாத சான்றோர் பலர் வறுமையால் வாடுகின்றனரே! அந்நிலை மிகவும் இரங்கத்தக்க தன்றோ எனின் உயர்ந்தோர் அதனை இழிவாகக் கருதமாட்டார் என்று உறுதி கூறுகிறார் நம் உயர் நாவலர்.

'கெடுவாக வையா(து) உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

எளிதில் நடுவுநிலை பிறழ்வது, வணிகர்க்கே உள தாகும் என்பதை வள்ளுவர் தெள்ளிதின் உணர்ந்து பேசுகிறார். எந்த நேரத்திலும் நிதியுடன் உறவாடும் விதி அவ்வணிகர்க்கே உண்டு. 'பணம் பத்தும் செய்யும்' என்பதற்கு இணங்க, எத்தகைய மறத்தையும் அஞ்சாது புரியத் தலைப்படுவர் அவ் வணிகர். அதற்குரிய வாய்ப்புக்கள் அவர்பால் நிரம்ப இருப்பதே அவ் வரம்பு மீறும் செயலுக்குக் காரணமாகும். ஆதலின் அவ் வணிகர்க்குத் தக்க இடத்தில் இன்றியமையாத அறிவுரையினை நன்றாக எடுத்தியம்பினார் பெருநாவலர்.

'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.'

என்பது அவர் சொல்லமுதமாகும். சிறந்த வாணிகத்திற்குத் தகுந்த இலக்கணம் வகுப்பார்போல இக்குறளை அமைத்தருளினார்.

பிறர் பொருளையும் தம் பொருளைப்போலப் பேணியொழுகும் பெருந்தகைமை வணிகர்க்கு அமைந்திட வேண்டிய அரிய பண்பாகும். பிறர் பொருளைத் தம் பொருளாகக் கவர்ந்துகொள்ளும் வணிகரையே பெரும்பாலராகக் காண்கின்றோம். தம் பொருளைப் போன்று பிறர் பொருளைக் கருதிக் காக்கும் ஆக்கமுடைய வணிகர் அரியரே. அத்தகைய அரிய வணிகர்க்கே வாணிகம் வளம்பெற வளர்ந்தோங்கும் என்று வலியுறுத்தினார் வள்ளுவர். அவரது வணிகக் கருத்

துக்கு விளக்கம் கொடுப்பதுபோலவே உருத்திரங் கண்ணனாரின் உரை அமைந்துள்ளதைக் காணலாம்.

‘நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்.’

பண்பினராய்ப் புகார் நகரத்து வணிகர் தகவுற்று விளங்கினர் என்று விரித்துரைத்தார் அப்புலவர்.

## ௫. பெண்மையும் திண்மையும்

பெண்ணின் தன்மையே பெண்மை எனப்படும். அப் பெண்மையாவது எவரும் விரும்பும் தன்மையே யாகும். 'பெள்' என்ற சொல், விரும்பு என்னும் பொருளைத் தருவது. பெட்பு என்பது 'பெள்' என்னும் பகுதியடியாகப் பிறந்த அருந்தமிழ்ச் சொல்லே' அன்பு, விருப்பம் முதலிய நற்பண்புகளைக் குறிப்பது அச்சொல். நாட்டின் இயல்பைச் சொல்லவந்த நம் வள்ளுவர்,

'பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.'

என்று இயம்பினார். இப் பாவிலுள்ள 'பெள் தக்கது. என்னும் தொடர், விரும்பத்தக்கது என்னும் பொருள் தந்து நிற்றலைக் காணலாம். ஆகவே பெண் என்ற சொல்லும் பெள் என்ற பகுதியடியாகவே பிறந்திருக்கவேண்டும். விரும்பத்தக்க நல்லியல்புடையாள் பெண்ணென்று குறிக்கப்பெற்றாள். ஆதலின் யாவரும் விரும்பும்தன்மையே பெண்மை என்பது பெறப்படும்.

இத்தகைய பெண்மைக்கு நம் பெருநாவலர் சொல்லும் இலக்கணம் யாது? அப் பெண்மைக்கு அவர் கொடுக்கும் பெருமை யாது? இவற்றை முதற்கண் நோக்குவோம். கற்பினின்று வழுவாத தன்மை, தன்னை மணந்துகொண்டவனை உண்டி முதலியவற்றால் நன்றாகப் பேணும் இயல்பு, தனது புகழ்—கணவன் புகழ் இவை நீங்காமல் காக்கும் பாங்கு, தனக்குரிய நற்குண நற்செயல்களை உறுதி

யாகக் கடைப்பிடித்து ஒழுகும் உயர்வு இவைகளே பெண்மைக்குரிய பெற்றிமைகளாக வள்ளுவர் வரையறுத்து ஒரு பாவில் வலியுறுத்துகிருர்.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

இங்ஙனம் குறித்த நல்லியல்புகளைக்கொண்ட நங்கையொருத்தியை மிகவும் மேம்பட்ட பொருளாக மதித்தார் திருவள்ளுவர். இத்தகைய மாதர் நல்லாளை மனைவியாக ஒருவன் பெறுவானுயின் அவன் பெரும் பேறு எய்தியவன். அவன் அடையத்தக்க பொருள்களுள் அவளுக்கு ஒப்பான பொருள் பிறிதொன்று இல்லை என்றே பேசினுர் நம் பெருநாவலர்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.'

என்று உறுதிதோன்ற உரைக்கும் அவர் சொல்லமுதப் பாவைப் பாருங்கள்.

அப் பெண்மைக்கு உயிர்நாடியாக நின்று உயர் வளிப்பது கற்பென்னும் திண்மையாகும். அது மனம் கலங்காத மாண்புறு நிலைமையாகும். கொண்ட கணவனைத் தெய்வமாகக் கொண்டு வணங்கும் உறுதியான உள்ளமே அக் கற்பென்னும் திண்மையாகும்.

'கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.'

என்று இலக்கணம் வகுப்பார் தமிழ்மூதாட்டியார். கணவன் உரையினை மறைமொழியாக மதித்து நடக்கும் மாருத உள்ளமே கற்பென்று அவரால் கட்டுரைக்கப்பட்டது. பெண்டிர்க்கு அழகு, கணவன்

கருத்துக்கு மாறுகப் பேசாதிருக்கும் பெற்றியே என்று கூறினர் அதிவீரராமர்.

கற்பு என்பது கற்றல் என்று பொருள்படும். கற்ற கல்வி அறிவே, ஒருவன் அல்லது ஒருத்தி ஒழுக்கத்தைப் பெற்று உயர்தற்குக் காரணமாவது. 'அறிவின் பயன் ஒழுக்கம்' என்றே ஆன்றோர் குறிப்பர். பெண்ணொருத்தி மணம் பெறுவதற்கு முன்னர்ப் பெற்றோரால் ஒழுக்க நெறிகளைக் கற்றுக் கொடுக்கப்பெறுவாள். அவள் மணம்புரிந்து மனையறத்தில் புகும்நாளில் மணந்துகொண்ட கணவனாலும் அவன் தந்தை தாயராகிய மாமன் மாமியராலும் மனையற நெறிகள் இவையென அறிவுறுத்தப் பெறுவாள். இங்ஙனம் பெற்றோரும் உற்றோரும் பேணுதற்குரிய கணவனும் கற்றுக்கொடுக்க அதனல் மேற்கொண்டொழுகும் அரிவையரின் ஒழுக்கநெறியே கற்பெனப்படுவதாயிற்று.

இத்தகைய கற்பின் ஏற்றத்தை வலியுறுத்த வந்த இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியர், மகளிர்க்கு நாணம் அவரது உயிரினும் சிறந்ததாக ஓம்பத் தக்கது; அதனினும் உயர்ந்ததாகக் காக்கத்தக்க மாண்புடையது கற்பு என்று வற்புறுத்தியுரைத்தார்.

> 'உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்
> செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று.'

என்பது அவர் நூற்பாவாகும்.

மகளிர் கற்பொழுக்கத்தால் தம்மைச் செம்மை சான்ற செல்வியராகக் காத்துக்கொள்ளும் கடமை பூண்டவர். அக் கற்புக் காவலே அன்னார்க்குப் பெருங் காவலாக விளங்குவது. கணவர், மனைவியராகிய மகளி

ரைச் சிறையால் காக்கும் சிறுசெயல் எந்தப் பயனையும் தந்திடாது. அவர்கள் அச் சிறையினைக் கடப்பதற்கு உள்ளத்தே கருதிவிட்டாராயின் தப்பிச் செல்லுவது உறுதியே என்று குறித்தார் திருவள்ளுவர்.

'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.'

என்பது அவர் சொல்லமுதமன்றே.

கற்பென்னும் திண்மையுடைய பெண்டிரை மணந்துகொண்ட ஆடவர்க்கு நிலவுலகில் ஒரு பெருமை உண்டு. அவர்களைப் பழித்துரைக்கும் பகைவர் முன்னும் ஆண்சிங்கம் போன்று தலை நிமிர்ந்து நடக்கும் பெருமித நடை அவர்க்கு உளதாகும். கணவரைத் தெய்வமெனக்கொண்டு வணங்கி யெழும் பெண்டிர்க்குத் தேவர்களும் ஏவல் கேட்பர் அவர்கள் பெய்யென்று கட்டளையிட்டால் மழையும் பொழியும் என்று புகன்றருளினர் நம் புலவர்.

இனி, முனிவர் ஒருவர் மொழிந்தருளும் பெண்ணிலக்கணத்தைக் காண்போம். பெண்ணவாள் கண்ணுக்கினிய கட்டழகு பெற்றிருக்கவேண்டும். காதலன் விருப்புக்குகந்த வகையில் தகுந்தவாறு தன்னை அணிசெய்துகொள்ளவேண்டும். நாணமும் அச்சமும் பேணும் பெற்றியளாகவேண்டும். ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்பதை உணர்ந்து கணவனுடன் ஊடுதலும் விரைந்து உணர்தலும் உடையவளாகவேண்டும். இன்மொழி பேசும் நன்மையளாக வேண்டும். இன்ன பல குணங்களும் இனிதின் அமைந்தவளே வாழ்வரசியாக விளங்கமுடியும் என்று விளக்கினார் அச் சமணமுனிவர்.

'கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினள்—உட்கி
இடன்அறிந்(து) ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்.'

என்பது அவரது நாலடிப் பாடல்.

பெரிதும் வறுமையுற்றான் ஒருவன் தன் மனைவியுடன் குடத்து நீரைக் காய்ச்சிக் குடித்து வாழ்வை நடத்திக்கொண்டிருக்கிறான். அத்தகைய வறுமைநிலையில் உறவினர் பலர் அவன் வீடுதேடி வந்துவிட்டனர். அங்ஙனம் வந்தவர் கடல்நீரும் வற்றிப்போமாறு உண்ணவல்ல எண்ணிறந்தோராவர். அவர்களையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்று இன்சொல்கூறி உபசரிக்கும் நல்லியல்பைக் கடனாகக் கொண்டவளே சிறந்த பெண்டாவாள் என்று பேசினார் மற்றொரு சமணமுனிவர்.

தாய் சேயிடத்துக் காட்டும் அன்பே தலையாயது. அத்தகைய தாயன்பு, என்றும் பெண்மைக்கு மாறாத இயல்பாக அமையவேண்டும். கணவனுக்குப் பணி புரிவதில் பெண், ஓர் அடியாளைப் போன்று குறிப்பறிந்து நடக்கும் விருப்புடையளாக விளங்கவேண்டும். கணவனுக்கு மகிழ்வூட்டுவதில் மலரும் பொன்னும் போன்ற மணமும் ஒளியும்பெற்று ஒளிரவேண்டும். அகழ்வாரைத் தாங்கும் நிலத்தைப் போன்ற அரிய பொறுமையின் உருவாக அவள் திகழவேண்டும். கணவனுடன் கூடிவாழும் காதல் வாழ்வில் அவனுக்குக் கனிந்த இன்பத்தைத் தருவதில் வேசியைப் போன்று விளங்கவேண்டும். மனையற வாழ்வில் கணவனுக்குத் தக்க சமயங்களில் ஆறுதலும் தேறு

தலும் அறிவுரையும் வழங்குவதில் அமைச்சனைப் போன்ற அறிவுடையாளாய் இருத்தல்வேண்டும். இத்தகைய நல்லியல்புகள் எல்லாம் ஒருங்கு அமையப் பெற்றவளே பெண்ணவாள் என்று ஓதியது ஒரு நீதிப் பாடல்.

> 'அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
> பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
> வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
> பேசில் இவையுடையாள் பெண்.'

என்பது அந்நீதிவெண்பா

இங்ஙனம் பெண்ணுக்குரிய நல்லியல்புகளைச் சொல்லிய அதே ஆசிரியர், அவள்பால் மிகுதியான பேச்சு இருத்தலாகாது என்றும் குறித்துள்ளார். 'ஆண்மக்கள் பலர் ஒருங்கு ஓரிடத்தே ஓரளவு பொறுமையுடன் இருந்துவிடுவர்; ஆனல் பெண்கள் இருவர் ஓரிடத்தே சேர்ந்து ஒற்றுமையாக இருத்தல் மிகவும் அருமை' என்று பெரியோர் சொல்வதுண்டு. பெண்கள் பேசத் தொடங்கிவிட்டால் பெருங்கேடு சூழ்ந்துவிடும் என்கிறார் அவ் ஆசிரியர்.

> 'பெண்ணொருத்தி பேசின் பெரும்பூமி தானதிரும்
> பெண்ணிருவர் பேசில்விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
> பேசில் அலைசுவறும் பேதையே! பெண்பலர்தாம்
> பேசினுல கென்னுமோ பின்.'

என்பது அவரது பாடல். பெண்கள் மென்மையும் இனிமையுமாகவே பேசவேண்டும்; அவர்கள் உரக்கப் பேசுவது தவறு; ஒருத்தி உரக்கப் பேசத் தொடங்கி விட்டாலே போதும், இந்நிலவுலகமே அதிர்ந்துவிடும்; இரு பெண்கள் அங்ஙனம் பேசினலோ வானத்து

மீன்கள் தானத்தினின்று வீழும்; பெண்கள் மூவர் சேர்ந்து பேசினார்களாயின் பெருங்கடலே வறண்டு போகும்; இம் மூவர்க்குமேல் பலர் பேசுவராயின் உலகில் யாது தீங்கு விளையுமோ? அறியேன் என்று இரங்கினார் அவ் ஆசிரியர்.

பெண்ணின் இயல்பைச் சொல்லவந்த முனைப் பாடியார் என்னும் புலவர், பெண்ணாவாள் கொண்டவன் குறிப்பறிந்து நடக்கவேண்டும்; நாணமுடையவளாக இருக்கவேண்டும்; கண்ட பொருள்களை யெல்லாம் விரும்பாதிருக்கவேண்டும்; கணவனும் உற்றவரும் வெறுக்கும் செயல்களை விட்டொழிக்க வேண்டும்; பிறர் பொருளை விரும்பாதிருக்கவேண்டும்; பெண்ணுக்குரிய சிறந்த உறுப்புக்களைப் பெற்றிருக்க வேண்டும்; கல்வியறிவும் அமைந்திருக்கவேண்டும்; இன்னவளே பெண்ணாவாள் என்று குறிப்பிட்டார்.

'கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை—விண்டு
வெறுப்பன செய்யாமை, வெஃகாமை நீக்கி
உறுப்போ டுணர்வுடையாள் பெண்.'

என்பது அவர் சொல்லும் அறநெறிச்சாரம்.

புகழேந்திப் புலவர் தமது நளவெண்பாவில் பெண்மையைக் காக்கும் விதத்தை நன்கு விளக்கு கிறார். பெண்மையை ஒரு நாடென்று உருவகம் செய்து கொண்டார் அப்புலவர். அந்நாட்டையாளும் அரசாகப் பெண்ணை உருவகப் படுத்திக் கொண்டார். பெண்ணரசி தனது பெண்மையெனும் பெருநாட் டைத் திண்மையுறக் காக்கும் திறம் யாது? நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும்

நால்வகைப் படைகளாக அமையவேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறி களும் ஐம்பெருங் குழுவாகிய அமைச்சரவையாக விளங்க வேண்டும். கால்களில் அணிந்த சிலம்புகளே கவினுறு முரசங்களாக ஒலிக்க வேண்டும். கண்கள் இரண்டும் வேலும் வாளுமாகத் திகழவேண்டும். முழுமதி போன்ற முகமே வெண்கொற்றக் குடை யாகத் தண்ணிழல் செய்ய வேண்டும். இத்தகைய உறுப்புக்களின் உறுதுணையால் பெண் தன்னியல் பைப் பேணிக் காத்தல் வேண்டும்.

> 'நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
> ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
> வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
> ஆளுமே பெண்மை அரசு.'

என்பது அப்புலவரது அரிய வெண்பா.

பெண்மைக்குரிய திண்மையான கற்பு நிலையைச் சித்தலைச் சாத்தனார் மூவகைப்படுத்து மொழிந்தார். தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு என்று வகுத் துரைத்தார் அத்தமிழ்ப் புலவர். கணவர் உயிர் துறந்ததை அறிந்ததும் நெட்டுயிர்ப்புடன் உயிரை விட்டொழிக்கும் உத்தம மகளிர் தலைக்கற்புடையா ராவர். கணவர் இறந்ததும் தம் உயிரைப் போக்கிக் கொள்ளுதற்காகத் தீயுட் பாய்ந்து மாய்வார் இடைக் கற்புடையாராவர். கணவர் இறந்த பிறகு மறுமை யிலும் அவருடன் கூடிவாழும் பேறு பெறுதற்காக உண்டி சுருக்குதல் போன்ற நோன்புகளைக் கொண் டொழுகி உயிர் நீங்குவார் கடைக்கற்புடையாராவார்.

> காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
> ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்கா(து)

இன்னுயி ரீவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரோ(டு)
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்.[7]

என்பது அச்சாத்தனாரின் மணிமேகலைப் பகுதியாகும்.

இங்ஙனம் சாத்தனார் குறித்த மூவகைக் கற்பு நிலையுள் கடைக்கற் புடையார் நோற்கும் நோன்பு முறையினைப் பூதப்பாண்டியன் தேவியார் தமது அருமையான புறப்பாட்டொன்றில் குறிப்பிடுகிறார். பூதப்பாண்டியன் இறந்தானாக உடன்கட்டை ஏறப் புகுந்த அவனது கோப்பெருந்தேவியாரை ஆங்கு நின்ற சான்றோர் ஈமத்தீயில் புகாது விலக்கினர். அவர்களை நோக்கி அவ்அரசியார் அரியதொரு தமிழ்ப் பாடல் பாடித் தம் விருப்பின்வண்ணமே அவ்ஈம நெருப்பில் விழுந்து இறந்தார்.

கடைக்கற்புடையாராய கைம்மை நோன்பு நோற்கும் காரிகையர் எண்ணெய்யோ பிற நெய்யோ தம் கையால் தீண்டார். நீரில் ஊறிய பழஞ்சோற்றையே உண்பர். வேளைக்கீரையையும் எள்ளுத் துவையலையும் அச்சோற்றுடன் உட்கொள்ளுவர். பருக்கைக் கற்கள் பரந்த தரையில் பாயுமின்றிப் படுப்பர். மறுமையில் தம் கணவரையே துணைவராகப் பெறுதற்கு இறைவனை வேண்டித் துதித்து நிற்பர்.

இடைக்கற்புடைய மகளிர்க்குத் தம் கணவர் உடம்பை எரித்தற் பொருட்டுப் புறங்காட்டில் அடுக்கிய கருங்கோட்டு ஈமத்தீ, நீராடுதற்குரிய

தாமரைப் பொய்கையைப்போல் தண்மையுடைய தாகும் என்று பெண்மை இயல்பொன்றை விளக்கினர் அப்பெருந்தேவியார். அவரது கற்புத் திண்மையினைக் காட்டும் பாட்டைப் படித்துப் பாருங்கள்.

'பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா(து) ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டா(து)
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவல் பெண்டிரே மல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்(டு) ஈமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே.'

பாண்டியன் நெடுஞ்செழியன் அரசவையில் சென்று கண்ணகி வழக்குரைத்தாள். கோவலன் கள்வனல்லன்; பொற்கொல்லன் சொல்லைக் கேட்ட தானே பொல்லாத கள்வன் என்பதை அவன் உணர்ந்தான். மன்பதை காக்கும் தென்புலக் காவல் என்முதல் பிழைத்துவிட்டதே! என் வாழ்நாள் இன்றோடு முடிவதாக என்று சொல்லி அரியணையில் சாய்ந்த வண்ணமே மாய்ந்தொழிந்தான். அவன் இறந்ததைத் தெரிந்த கோப்பெருந்தேவி உடனே கோவென அலறி உயிர்நீத்தாள். அவள் தலைக்கற்புக்குத் தக்க எடுத்துக்காட்டாவாள். கணவனை இழந்ததும் நெருப்பில் வீழ்ந்து இறப்பதாகிய

இடைக்கற்புக்குப் பூதப்பாண்டியன் தேவியார் பொருத்தமான எடுத்துக் காட்டாவார். கணவராகப் பெற்றோரால் தேர்ந்து உறுதிசெய்யப் பெற்ற கலிப் பகையார் போர்க்களத்தில் உயிர் துறக்க கைம்மை நோன்பு நோற்று இம்பர் மனைத்தவமிருந்த திலக வதியார் கடைக்கற்புக்கு ஏற்ற சான்றாவார்.

கற்பென்னும் திண்மை பூண்ட பெண்களின் பெருமையை இளங்கோவடிகள் தமது காவியத்தில் பற்பல இடங்களில் பொற்புறப் போற்றிப் புகல் கின்றார். அவர் அக்காவியத்தால் வலியுறுத்தும் உண்மைகள் மூன்றனுள் ஒன்று பத்தினிப் பெண் டிரை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதாகும். இன்னும் ஆராய்வார்க்கு அக்காவியமே கண்ணகி கற்பு மாண் பைப் புலப்படுத்தும் நலப்பாடுடையது என்பது தெளி வாகும்.

கற்புக்கரசியாகிய கண்ணகியுடன் மதுரைமாநகர் அடைந்த கவுந்தியடிகள் அந்நகர்ப் புறஞ்சேரியில் வாழும் மாதரி என்னும் ஆயர்குல நங்கைபால் கண்ணகியை அடைக்கலமாக ஒப்புவித்தார். அப் பொழுது கண்ணகியின் சிறப்பை அப்பெண்ணுக்கு அறிவுறுத்தும் கவுந்தியடிகள் வாக்கில் கற்புடை மாதரின் பொற்புத்திறன் இனிது புலனாவதாகும்.

என்னொடு வந்த இக்கண்ணகி நல்லாளின் வண்ணச் சீறடியை மண்மகள் என்றும் அறிந்த தில்லை. அத்தகைய மெல்லியல் செல்வ நங்கை ஊழ் வினையால் கணவனுடன் கடுங்கதிர் வெம்மையில் நடந்து வந்தாள். அவள் தன் துயரைக்கூடப் பொருட்படுத்தாது கணவன் துயருக்காகக் கருத்

தழிந்து வாடினுள். இஃதன்றோ கற்புடையமாதரின் பொற்புடைய செயலாகும்! இத்தகைய மாதர் நல்லார் வாழும் நாட்டில் வானம் பொய்யாது மழை பெய்யும். நிலம் தப்பாது வளத்தை நல்கும். மன்னர் நீதி தவருது நீணிலத்தை ஆளுவர். இங்ஙனம் பத்தினிப் பெண்டிர் பெருமையைச் சித்தம் கொள்ளுமாறு கவுந்தியடிகள் மாதரிக்கு விரித்துரைத்தார்.

'வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு.'

என்பது அவரது கூற்ருக அமைந்த சிலப்பதிகாரப் பகுதியாகும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மருதி என்ற பார்ப்பனி காவிரியாடித் தன்வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள். அன்னேக் ககந்தன் என்பானின் மகன் காமக்கருத்துடையனுய் என்னுடன் வாவெனக் கூவி அழைத்தான். அது கேட்ட மருதி மனம் கலங்கியவளாய்த் தன் வீட்டிற்குச் செல்லாது பூத சதுக்கத்தில் புகுந்தாள். ஆங்கிருந்து நீதியைக் காக்கும் பூதத்தினிடம் தனது நிலேயைக் கூறி முறை யிட்டாள்.

'மண்டிணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டி ராயின் பிறர்நெஞ்சு புகாஅர்.'

என்று அறநூல்கள் பேசுகின்றனவே; யானே கொண் டானுக்குச் சிறுபிழையும் புரியாத அரிவை; கற்பு நெறியில் பிறழாது அவனுடன் மனேயறம் நடத்து கின்றேன்; அங்ஙனமாகவும் கண்டவன் கருத்தில்

யான் புகுந்ததற்குப் புரிந்த பிழைதான் யாது? என்று உள்ளம் நடுங்கி ஓலமிட்டாள்.

அப்பொழுது அச்சதுக்கபூதம், மருதியை நோக்கி, "நீ எப்பொழுதும் பிறர் பேசும் பொருளொடு புணராப் பொய்ம்மொழிகளையும், பொருளொடு புணர்ந்த நகைமொழிகளையும் கேட்டலில் நாட்டம் கொண்டனை; பிற தெய்வங்கட்கு நிகழும் பெருவிழாக் களைக் காண்டலில் விருப்புற்றனை; ஆதலின் கணவனைத் தெய்வமென வணங்கும் கற்பு நெறியில் பிறழ்ந்தாய்; தெய்வப்புலவன் திருவள்ளுவன் சொல் லிய நல்லுரையினைத் தெளியாதொழிந்தாய்;

> 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றஅப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்.'

அதனால் விளைந்த விளைவே இதுவாகும் என்று மறு மொழி பகர்ந்தது.

மகளிர் கற்பாற்றலுக்கு மாதவ முனிவர்களின் தவவன்மையும் ஒப்பாக முடியாது என்பர் உயர்ந் தோர். அத்தகைய கற்புத்திறனால் தேவர்களையும் ஏவல்கொண்ட பாவையர் பலர் இந்நாட்டில் நிலவினர். கண்ணகி, ஆதிரை, மங்கையர்க்கரசி, புனிதவதி, சீதை, தமயந்தி, சாவித்திரி போன்ற கற்பரசியர் காவியம் போற்றும் தேவியராகத் திகழ்ந்துள்ளனர்.

சிறையிருந்த செல்வியாகிய சீதையின் ஏற்றம் கூறும் செந்தமிழ்க்காவியமாகிய இராமாயணத்தில் அனுமன்வாயிலாக அக்கற்பரசியின் ஒப்பிலாப் பெருமை உரைக்கப்படுகிறது. அசோகவனத்தில் சீதையைக் கண்டுவந்த சொல்லின் செல்வனாகிய

அனுமன் இராமபிரானுக்கு அவளது தூய நிலையைப் பணிவுடன் அறிவுறுத்தும் திறம் மிகவும் நயம் வாய்ந்ததாகும்.

> ‘விற்பெருந் தடந்தோள் வீர
> வீங்குநீர் இலங்கை வெற்பின்
> நற்பெருந் தவத்த ளாய
> நங்கையைக் கண்டே னல்லேன்
> இற்பிறப் பென்ப தொன்றும்
> இரும்பொறை யென்ப தொன்றும்
> கற்பெனும் பெயர தொன்றும்
> களிநடம் புரியக் கண்டேன்.’

என்பது அனுமன் கூற்றாக விளங்கும் கம்பன் கவியமுதமாகும்.

பிற்காலக் கவிஞராகிய பாரதியார் பெண்மையின் பெருமையை வியந்து பேசுகிறார். துன்பம் தீர்வதும் இன்பம் சேர்வதும் பெண்மையினாலேயே. உடலுக்கு வலிமையூட்டுவது தாயூட்டும் பாலன்றோ! மனைவியின் இனிய மொழிகளன்றோ ஒருவனுக்கு மானமுடைய வாழ்வை உண்டுபண்ணுவது! உயிரைக் காத்து உயிருக்கு உயிராய் விளங்கி இன்பத்தை ஊட்டும் பெண்மைக்கு ஒப்பானது பிறிதுண்டோ! அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கை அப்பெண்ணின் திருக்கையன்றோ! அவளது கை ஆணை காட்டுமாயின் அனலையும் ஆண்கள் விழுங்கிவிடுவர் என்று விளம்பினார் பாரதியார். அத்தகைய பெண்மையை வாழ்க! என்றும், வெல்க! என்றும் வாயார வாழ்த்தினார்:

> ‘அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
> ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்.’

என்று பாடும் பாரதியின் வீரவாசகம் பெண்மைக்கு அளவிலாத பெருமை தருவதன்றோ!

இருபதாம் நூற்றாண்டின் இனிய கவிஞராகிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, பெண்களின் உரிமைகளை அருமையாக விளக்கியுள்ளார். பெண்ணாய்ப் பிறப்பதற்கே பெருந்தவம் செய்யவேண்டும் என்பது அவர் கருத்தாகும். அவர்கள் மலர்க்கரத்தாலன்றோ மாநிலத்தில் அறங்கள் வளர்ந்தோங்குகின்றன! அல்லும் பகலும் அயராது உழைப்பவர் அப்பெண்களன்றோ! கல்லும் கனிந்து உருகுமாறு அன்பு காட்டும் பண்புடையார் அப்பெண்பாலரன்றோ! நோயால் வாடும் ஆடவர்க்குத் தாய்போல் பக்கமிருந்து பேணுவார் அப்பெண்டிர் அன்றோ! கண்ணீர் துடைத்துக் கவலைபோக்குவாரும் இனிய உரைகளால் உள்ளத்தை ஊக்குவாரும் அம் மகளிரே. நெறி தவறிச் செல்லும் வம்பரையும் நேர்வழியில் செல்லுமாறு செய்யும் வல்லமை அவர்க்கே உள்ளதாகும். மானம் இழந்த மக்களையும் மாண்புடையாராகச் செய்யும் மதிவன்மை அவர்க்கே உண்டு. உயிர் நீங்கும் வேளையிலும் பக்கத்தில் உடனிருந்து கடவுளைக் கருதித் தொழுமாறு செய்வார் அத்தோகையரே. கணவனை இழந்த மகளிர்க்கும் பெற்றோரை இழந்த பிள்ளைகட்கும் மகிழ்வூட்டி ஆறுதல் கூறுவார் அவ் அரிவையரே. சிறிய வயதிலேயே ஈசன் சேவடியில் சிந்தை செலுத்துமாறு செய்வோரும் அவர்களே. அன்பிற்காகவே வாழ்ந்து, அன்பினால் ஆவியும் போக்கத் துணிவார் அப்பொன்னனையார். புன்முறுவல்பூத்த நன்முகத்தால் வீட்டைப் பொன்மனையாகப்

பொலிவுறச்செய்யும் பேராற்றல் அப்பெண்களுக்கே உண்டு. ஆதலின்,

'மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டும்.'

என்று பெண்மையைப் பாராட்டினர் அப்பெரும் புலவர்.

## ரு. ஊழும் நாளும்

ஊழ் என்பது மிகவும் உயர்ந்த ஒரு தமிழ்ச் சொல். அது பிறமொழிச் சொல்லன்று என்பதற்கு அதன்கண் உள்ள சிறப்பு ழகரமே தக்கசான்று. இச்சொல் மலர்தல், உதிர்தல் என்னும் இரு பொருளைத் தருவதாகும். 'இணர் ஊழ்த்தும் நாறு மலர்' என்று வள்ளுவரே அச்சொல்லை மலர்தல் என்னும் பொருளில் எடுத்தாள்கின்றார். கொப்பூழ் என்னும் சொல்லைக் கூர்ந்து நோக்கினால் கொம் பிருந்து உதிர்ந்த இடமே அப்பெயர் பெற்றது என் பதை உணரலாம். கருப்பத்துள் இருக்கும் குழந் தைக்கு உணவுகொள்ள உதவும் குழல் போன்ற தொரு கருவியே அக்கொம்பு. எனவே, பருவ காலத் தில் மலரும் மலரைப்போன்று பயன் தரும் காலத்தில் உரிய பயனை ஊட்டிப் பின்னர் உதிரும் இயல்புடை யது அவ் ஊழ் என்று கொள்ளலாம். இக்கருத்தை,

> 'மாமலர் நாற்றம் போல்மணி மேகலைக்(கு)
> ஏது நிகழ்ச்சி எதிர்ந்துளது.'

என்னும் சீத்தலைச்சாத்தனாரின் சீரிய வாக்கும் நன்கு வலியுறுத்தும்.

இவ் ஊழை, வினை, விதி, பால், வரை, முறை, தெய்வம் என்று பலவாறு புலவர் குறிப்பர். செம்பிற் களிம்புபோல உயிரைவிட்டு அகலாத ஆணவ இருள் ஒன்றுண்டு. அதுவே வினைகளைச் செய்யுமாறு தூண்டிச் செலுத்துகிறது. அவ் ஆணவ முனைப்பால் மனிதன் நல்வினையோ தீவினையோ செய்து கொண்டே இருக்கிறான். பேதையாயினன் ஒரு

பிறப்பிலேயே எழு பிறப்பிலும் துன்புறுதற்குக் காரணமான தீவினைகளைச் செய்துகொள்வான் என்று செப்பினர் நம் ஒப்பில் புலவர் :

'ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.'

என்பது அவர் சொல்லமுதமன்றோ!

இன்பம் துய்த்தற்குக் காரணமான ஊழை ஆகூழ் என்றும், துன்புறுதற்குக் காரணமான ஊழைப் போகூழ் என்றும் குறித்தார் பொய்யில் புலவர். அவை முறையே நல்வினை தீவினையென்றும் சொல்லப்பெறுவதுண்டு. அறத்தைப் புரிதற்கும் பொருளை யீட்டுதற்கும் இன்பத்தைப் பெறுதற்கும் முதற்காரணமாவது ஊழே என்பதை வலியுறுத்த அறத்துப்பாலின் இறுதியில் அவ் ஊழியலை வகுத் தருளினர் வள்ளுவர்.

ஒருவனுக்கு ஆகூழ் உளதாயின் அவனை அறியாமலே அவன்பால் ஊக்கமும் முயற்சியும் உயர்ந்தெழும்; போகூழ் பொருந்திவிடுமாயின் அவன் எத்துணை முயன்றாலும் அழிதற்குக் காரணமாகிய சோம்பலே பெருகிக்கொண்டிருக்கும். ஒருவன் பேரறிவைப் பெற்றிருந்தாலும் அவன் கைப்பொருளை இழத்தற்குக் காரணமாகிய போகூழ் வந்து சூழ்ந்துகொண்டால் அவனைப் பேதையனக்கிவிடும். சிற்றறிவுடையான் ஒருவனுக்கு ஆகூழ் வந்து சூழ்ந்தாலோ அவன் அறிவு தானகவே விரிவெய்தி விளக்கம்பெறும் என்றார் திருவள்ளுவர்.

'பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

பேதைமை விளைக்கும் தீவினையுடையான் நுண் பொருள் கூறும் பெருநூல்கள் பலவற்றைக் கற்ரு லும் அவை அவனுக்குப் பயன்தரமாட்டா. அவ னுக்குப் பின்னும் அப்பேதைமை அறிவே பெருகி நிற்கும். ஆதலின் நல்லறிவைப் பெறுதற்கும் நல் வினைவேண்டும். பெருஞ் செல்வத்தைப் பெறுதற்கும் பிறிதொருவகையான ஆகூழ்வேண்டும். அறிவுடையா ராதற்குக் காரணமாகும் ஊழ், செல்வராதற்குக் காரணமாகாது. செல்வராதற்குக் காரணமாகும் ஊழ், அறிஞராதற்குத் துணைசெய்யாது. இதனையே வள்ளுவர்,

> 'இருவே றுலகத் தியற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு.'

என்று கூறியருளினர்.

ஒருவன்பால் செல்வம் பெருகுதற்குக் காரண மான ஊழ் உளதாயின் அச் செல்வத்தை ஆக்கு வதற்கு நல்லவையெல்லாம் தீயவாகவும் தீயவை யெல்லாம் நல்லனவாகவும் மாறிப் பயன் தரும். ஒருவன் செல்வத்தை எவ்வளவுதான் சேமித்துக் காத்தாலும் அது நிற்றற்குரிய ஊழ் அற்றுப்போமாயின் அச் செல்வமும் நில்லாது அகன்றுவிடும். அவனுக்கு மேன்மேலும் செல்வம் வளர்தற்குக் காரணமான ஊழ் வலிபெற்று நிற்குமாயின் அச்செல்வத்தைப் புறத்தே கொண்டு வெறுத்துச் சொரிந்தாலும் அகலாது நிறைந்துகொண்டே இருக்கும்.

> 'பரியினும் ஆகாவாம் பாலல்ல வுய்த்துச்
> சொரியினும் போகா தம.'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

ஐம்புல இன்பங்களையும் அனுபவித்தற்கு வேண்டும் பொருள்கள், ஒருவனிடம் அளவிலாது அமைந்திருக்கலாம். அவன் கோடிக்கணக்கான செல்வத்தை மலைபோல் குவித்திருக்கலாம். அவற்றை அவன் நுகர்ந்து மகிழவேண்டுமென்றாலும் நல்லூழ் வேண்டும் என்று நவின்றார் திருவள்ளுவர்.

'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது.'

என்பது அவர் சொல்லமுதமன்றோ!

சில சமயத்தவர்கள் ஊழ்வினை ஒருவனைத் தானே வந்து பற்றி அதன் பயனைத் தருகிறது என்பர். பல்வேறு பசுக்கள் நிறைந்த பெருங் கூட்டத்தில் இளங்கன்று ஒன்றைச் செலுத்தினால் அது தன்னுடைய தாய்ப் பசுவைத் தானே நாடி அடைந்துவிடும். அஃதேபோல் ஒருவன் செய்த வினை செலுத்துவானின்றித் தானே செய்தவனை மறுமையில் சென்று சேர்கின்றது என்பார் ஒரு சமணமுனிவர்.

'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.'

என்பது அவரது நாலடிப் பாடல். இக்கருத்து வள்ளுவர்க்கு உடன்பாடன்று என்பதை 'வகுத்தான் வகுத்த வகை' என்ற அவர் வாக்கால் அறியலாம். வினைப்பயனை அனுபவிக்குமாறு செய்பவன் இறைவன்; அவன் வினைசெய்தானைக் காட்டி ஊட்டாவிடின் அவ்வினையினுக்கு உரியவனை நாடியுறுதல் இயலாது என்பது வள்ளுவர் உள்ளமாகும்.

மனிதன் தனக்கு நல்வினை இன்பம் விளைக்குங் காலத்து அதனை நன்று நன்றென்று துய்க்கின்றான். ஆனால் தீவினை துன்பம் விளைக்குங் காலத்தோ, அவன் அதனை அனுபவிக்க விரும்பாமல் அதனை விலக்குதற்காகப் பெருமுயற்சி செய்கின்றான். அதனால் அல்லல் பல அடைகின்றான். நல்வினை, இன்பம் நல்குங் காலத்து அது வேண்டாவென்று விலக்கமுயலாத ஒருவன் தீவினைப்பயனை அனுபவிக்க இசையாதது ஏனோ? என்று வினவுகிறார் திருவள்ளுவர்.

> 'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
> அல்லற் படுவ தெவன்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

வினைப்பயனை 'ஊட்டவல்ல ஊழை வெற்றி கொள்வது அரிதே. அதைப் போன்று பெருவலி படைத்தது பிறிதில்லை. அதனை விலக்குதற்கு எத்தகைய உபாயத்தை எண்ணி மேற்கொண்டாலும் அவ் உபாயத்தின் வாயிலாகவோ பிறிதொன்றன் வாயிலாகவோ முற்பட்டுவந்து பயனைத் தந்துவிடும் அந்த ஊழ் என்று அறிவுறுத்தினர் பெருநாவலர்:

> 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

இராமபிரானுக்கு நாளை முடிசூட்டும் மங்கல நன்னாள் என்பதை உணர்ந்தாள் மந்தரை. அவள் நெடுநாட்களாக நெஞ்சத்தில் கொண்டிருந்த வஞ்சத்திற்கு ஒரு தீர்வு காணமுயன்றாள். கைகேயியின் கடிமனை அடைந்தாள். அவளைத் தனது சூழ்ச்சி

வலையில் வீழ்த்தினாள். மந்தரையின் தந்திர வலையுள் சிக்கிய சிறியாளாகிய கைகேயியும் தசரதன் சிந்தையைச் சிதைத்தாள். இராமனை வனம் புகுமாறு செய்தாள். அரசமுடி தரிக்கவேண்டிய மங்கலநாளில் இராமன் மரவுரி தரித்து வனத்தினை நோக்கி நடந்தான். இந்நிலை ஏற்படுதற்கு ஊழ்வினையே காரணமன்றோ! இதனைச் சொல்லவந்த கவியரசராகிய கம்பநாடர் ஊழின் பேராற்றலை வலியுறுத்தி உரைத்தருளினார் :

‘வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை யொருவரால் ஒழிக்கற் பாலதோ?’

என்று இராமன் நிலைக்கு மனமிரங்கிப் பேசுகிறார் அப் பெருங்கவிஞர். ‘அன்று எழுதியதை அழித்து எழுத முடியுமா?’ என்று கேட்பர் பழுத்து முதிர்ந்த அறிவாளர்.

முதிர்ந்த தவமுடைய முனிவராயினும் தனிப் பெருஞ்செல்வச் சிறப்புடையாராயினும் பரந்த பேரறிவைப் படைத்தோராயினும் பெருவலியுடையோராயினும் வேறு எவ்வகையில் சிறந்தோராயினும் விதியினை வெல்லுதல் என்பது ஒல்லாது என்று உரைப்பார் கச்சியப்பர் :

‘முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்.’

என்பது கந்தபுராணக் கவிதையாகும்.

வெல்லுதற்கரிய விதியாகிய பழவினையைப் பற்றி நாலடியார் பல கருத்துக்களைப் பகர்கின்றது. விளாங்காய் உருண்டு திரண்ட வடிவோடு விளங்குகின்றது. களாங்கனி கருமை நிறத்துடன் காணப்படுகிறது. இவற்றை அங்ஙனமாக்கினார் உலகில் எவருமில்லையன்றோ! வளமான செல்வத்துடன் வாழ விரும்பாத மக்கள் யாவர்? எவரும் இலர். ஆனால் எல்லோரும் செல்வராக இருக்கின்றனரா? இல்லை. சிலர் வறியராகவும் வேறு சிலர் செல்வப் பெரியராகவும் விளங்குதற்குக் காரணம் அவரவர் ஆற்றிய ஊழ்வினையே. அவ்வினை துணை செய்தாலன்றி முயற்சி பெரும்பயனை விளைத்துவிடாது என்பதே சமணமுனிவர் ஒருவரின் கருத்தாகும். இதனையே மற்றொரு சமணமுனிவரும்,

> ‘வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
> தீண்டா விடுதல் அரிது.’

என்று கூறி வலியுறுத்தினர்.

முற்றுந் துறந்த பட்டினத்தடிகள் தம் நெஞ்சிற்குக் கூறும் செஞ்சொல் அறிவுரையொன்றில் ஊழின் இயல்பு தெளிவாக உரைக்கப்படுகின்றது. ஒருவன் வாழ்வில் வரும் துன்பங்களைக் கண்டு அழுவதாலும் விழுவதாலும் பிறரைத் தொழுவதாலும் யாதொரு பயனும் விளையாது. ஒருவனுக்கு நன்மையும் தீமையும் வருவதெல்லாம் முன்னை வினையின் வண்ணமேயாகும். ஆதலின் அத் துன்பங்களைக் கண்டு, மனமே! சலியாதிருப்பாய் என்று ஆறுதல் கூறினர் அத் துறவியார்.

குசேலர் வறுமையிலேயே வாழ்ந்தவர். அவ்வறுமை மிகுதியால் என்றும் கந்தலாடையைக் கட்டியிருந்தார் அவர். அதனாலேயே குசேலர் என்னும் பெயர் பெற்றார். அவருக்கு இருபத்தேழு மக்கள். அவருடைய மனைவியாகிய சுசீலை, அம் மக்களோடு மிக்க வறுமைத் துயரை அனுபவித்து வந்தாள். குசேலரோ தம் வறுமையைப் பற்றிச் சிறிதும் கவலையின்றித் திருமாலைத் தியானம் செய்துகொண்டே இருந்தார். அது கண்ட சுசீலை, குசேலரை நோக்கி, "நம் வறுமையைப் போக்க ஏதேனும் வழி தேடலாகாதா? கண்ணபிரான் நம்முடன் கலை பயின்ற ஒருசாலை மாணாக்கர் என்று சொல்லுகின்றீரே! அவர் வடமதுரை யாளும் மன்னராக இருக்கிறாரே! அவர்பால் சென்று நிரம்பப் பொருளைப் பெற்றுவந்தால் நம் வறுமை அகலுமல்லவா?" என்று இடையிடையே நினைவூட்டுவாள். அப்பொழுதெல்லாம் குசேலர், "பெண்ணே! ஏன் வருந்துகிறாய்? முற்பிறவியில் புண்ணியம் செய்தவர் இப்பிறவியில் இன்பம் பெறுகின்றனர்; பாவம் செய்தவர் துன்பம் அடைகின்றனர்; எல்லாம் வினைப்பயன். இதற்காக மனம் வருந்துவதில் பயனில்லை," என்று கூறுவர்.

'மக்களுக் கிரங்கி வாடும்
மடத்தகை அணங்கு கேட்டி
தக்கமுற் பவத்தி லான்ற
தருமநன் கியற்றி னோர்கள்
ஒக்கவிப் பவத்தி லின்பம்
ஒருங்கனு பவிப்பர் இன்றேல்
மிக்கவெந் துயரத் தாழ்வர்
இதற்குளம் மெலிதல் என்னே !'

என்பது குசேலோபாக்கியானம்.

ஒருவன் முற்பிறப்பில் என்னவினை செய்தான் என்பதைப் பிறந்துள்ள இப்பிறப்பில் துய்க்கும் இன்ப துன்பங்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். இப்பிறப்பில் அவன் செய்யும் வினையால் மறுமையில் பெறும்பேறு இன்னது என்பதையும் தெரிந்து கொள்ளலாம் என்று அறிந்துரைத்தார் அறநெறிச்சார ஆசிரியர்.

'இறந்த பிறப்பில்தான் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக—பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக இனிப்பிறந்(து)
எய்தும் வினையின் பயன்.'

என்பது அவர் காட்டும் அறநெறி.

பெண்ணொருத்தி பெருநலம் படைத்து விளங்கினாள். அவள் சிறந்த செல்வக் குடியில் பிறந்தவளே. அவள் நலங்களுக்கு ஏற்ற இளங்காளை ஒருவனே கணவனாக வாய்த்தான். எனினும் அவள் அக்கணவனுடன் கூடிவாழும் இன்பத்தைப் பெறாது ஏங்கி நின்றாள். அவளது வருந்திய நிலைகண்ட தோழி "நினக்குக் குறையொன்றும் இல்லையே; நின் கவலைக்குக் காரணம் யாது?" என்று வினவினாள். அதற்கு அவள் கூறிய மறுமொழி விதியின் பயன் என்பதொன்றே :

'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்.'

என்பது தமிழ் மூதாட்டியின் அமுதமொழியாகும்.

கற்பகத்தரு வேண்டுவார் வேண்டுவன எல்லாம் விரும்பி யளிக்க வல்லது. அத்தகைய கற்பகத்தை

அணுகி அமுதனைய கனியொன்றைத் தருகவென ஒருவன் வேண்டினன். அக்கற்பகமோ அமுதக் கனியைத் தாராது, நச்சுக்காயாகிய காஞ்சிரங்காயைத் தந்தனுப்பியது. இதன் காரணம் யாது? என்று வினவுவார்க்குத் தமிழ் மூதாட்டியார் தரும் விடையும் ஊழ்வினை என்ற ஒரு சொல்லே :

'கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை.'

என்பது அவர் மூதுரையாகும்.

வெறும்பானை யொன்றை அடுப்பில் ஏற்றினன் ஒருவன். அதில் நீரோ அரிசியோ பெய்தானில்லை. அடுப்பில் நெருப்பும் மூட்டவில்லை. பானை பொங்குமா? பொங்குமா? என்று கூர்ந்து பார்த்துக்கொண்டே யிருந்தான். என்ன நிகழும்? பானை இருந்தபடியே இருந்தது. வறுமையால் வாடும் ஒருவன் அதனைக் களைவதற்கு வழியுந் தேடாமல் இருநிதியம், தன்னை நாடிவருமோ? என்று வழி நோக்கி விழித்திருப்பானாயின் யாது பயன்? தன் துயருக்காகத் தெய்வத்தை நொந்தும் என்ன பயன்? முன்னைப் பிறப்பில் பன்னரும் அறத்தைப் பண்ணியிருந்தாலன்றோ இன்று அவனைச் செல்வம் நண்ணும்! வெறும்பானை பொங்காத தன்மையைப்போல, அறம் செய்யாதார்க்குச் செல்வம் சேர்வதில்லை என்றார் செந்தமிழ் மூதாட்டியார் :

'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்(து)
அறும்பாவம் என்னஅறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.'

என்பது அவர் காட்டும் நல்வழியாகும்.

தமிழில் தோன்றிய முதற் பெருங்காவியமாகிய சிலப்பதிகாரம் மூன்று நீதிகளை நிலைநாட்டும் நோக்கத்துடனேயே ஆக்கப் பெற்றது. அந்நூல் வலியுறுத்தும் நீதிகள் மூன்றுள்ளும் முதன்மையாகவும் பிற இரண்டினுக்கும் அடிப்படையாகவும் விளங்குவது,

'ஊழ்வினை உருத்துவந் தூட்டும்'

என்ற நீதியேயாகும். இவ் உண்மையை அடிப்படையாக வைத்துக்கொண்டே சிலப்பதிகார ஆசிரியர் அக்காவியத் தலைவன் தலைவியர்க்குக் குலைவு ஏற்படும் காலமெல்லாம் 'வினைவிளை காலமாதலின்' என்றே விளக்கிச் செல்லுவார். இங்ஙனம் 'ஊழ்வினை ஒருவனை விடாது; அதனைச் செய்தவன் அதன் பயனை அனுபவித்தேயாக வேண்டும்' என்ற உண்மையைத் திண்மையுற விளக்குதற்கென்றே நம் தமிழகத்தில் பெருங்காவியம் ஒன்று பிறந்ததென்றால் 'ஊழிற் பெருவலி யாவுள' என்று வள்ளுவர் வினவியதில் வியப்பென்னை !

இத்தகைய பேராற்றல் படைத்த ஊழை உலையாத தாளாண்மையால் வெல்ல முடியும் என்றார் வள்ளுவர். மனிதன் உள்ளுவன எல்லாம் உயர்ந்தனவாக இருக்க வேண்டும். அவற்றை அடைதற்கு அயராத முயற்சியும் எடுக்கவேண்டும். ஊழ்வினை, அம் முயற்சியின் பயன் கிடையாதவாறு தடை செய்யலாம். அது ஒருமுறையோ இருமுறையோ தடை செய்வதன்றி எப்பொழுதும் தடுப்பதில்லை. பலமுறை முயல்வார்க்குப் பயனுண்டு; அந்த ஊழை வெல்லும் வல்லமை உண்டு என்பதை வலியுறுத்தும் வள்ளுவர்

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.'

என்று உரைத்தருளினார்.

மிருகண்டுவின் மகனாகிய மார்க்கண்டன் தன் வாழ்நாள் முடியும் இறுதி எல்லையில் இறைவனை உறுதியாகப் பற்றி நின்றான். அப் பெருமான் திருவருளைப் பெற்றுய்யப் பெருந்தவம் கிடந்தான். அவனது தளராத தவமுயற்சியால் அவனைக் கன்றிய காலனைச் சிவன் காலாற் கடிந்து கருணை புரிந்தான்.

'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.'

என்னும் வள்ளுவர் சொல்லமுதம் மார்க்கண்டன் வரலாற்றால் எத்துணைச் சுவைதந்து உறுதியாகின்றது! இதனை விளக்க முற்பட்ட குமரகுருபர அடிகளார்,

'உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி.'

என்று சான்று காட்டி விளக்கியருளினார்.

## ௬௰. மடியும் மறதியும்

மக்களுள் சிலர் மிக்க கேட்டை யடைதற்குத் தக்க காரணமாவன நான்கு தீய பண்புகள். அவை மடியும் மறதியும் துயிலும் காலத்தாழ்வும் ஆகிய குற்றங்களே. இவற்றைத் திருவள்ளுவர், இறக்கும் இயல்புடையார் விரும்பியேறும் மரக்கலங்கள் என்று குறிப்பிடுவார். விரைவில் அழிவுறும் மக்கள் விரும்பிப் புனேயும் அணிகலங்கள் என்றும் அவற்றைக் கூறலாம்.

'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

அழிவைத் தரும் இழிந்த பண்புகள் நான்கனுள் மடியும் மறதியுமாகிய இரண்டைமட்டும் இப்பகுதியில் ஆராய்வோம். அவற்றுள் முதற்கண் மடி என்பதை நோக்குவோம். இதனைச் சோம்பல் என்றும் சொல்லுவர். இது தாமத குணத்தால் ஏற்படும் இழிந்த இயல்பாகும். ஒருவன் வாழ்வு மடிவதற்கு இஃதொன்றே போதுமானதாகலின் இக்குற்றத்தை மடி என்று குறிப்பிட்டனர் நம் முன்னோர். 'சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்' என்று சுருக்கமாகச் சொன்னார் தமிழ்மூதாட்டியார்.

ஓரிடத்தில் சுடர் விளக்கை யேற்றினல் அங்குச் சூழ்ந்த இருளகன்று ஒளி விளங்குவதுதான் இயல்பு. அவ்விளக்கு நந்தா விளக்காயின் எந்த நேரத்திலும் அந்த இடம் ஒளியுடன் விளங்குமன்றோ! குடும்பம் என்பது ஒரு குன்ருத விளக்கு. அது குன்றி

விட்ட விளக்காக ஒளி வீசுமாறு செய்யவேண்டிய பொறுப்பு, அக்குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு வரையும் சாரும். குடியிற் பிறந்தார் தம் பொறுப்பை உணராது உளங்குன்றி மடியுடையாராயின் அக்குடி அடியோடழியும். குடும்பமாகிய குலமணி விளக்கு, அக்குடும்பத்தில் தோன்றியவனது சோம்பலாகிய இருள் சூழுமாயின் அணைந்துவிடும் என்று இயம்புகிறார் திருவள்ளுவர்.

> 'குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
> மாசூர மாய்ந்து கெடும்.'

என்பது அவர் சொல்லமுதமாகும். மேலும், உயிர் வளி உள்ள விடத்துத்தான் விளக்கு ஒளிவிட்டு எரியும். அவ்வுயிர்வளி குறைந்து கரிக்காற்று நிறையுமாயின் விளக்கு அவிந்து போகுமன்றோ! அஃதே போல் குடிவிளக்கும் ஊக்கமென்னும் உயிர்வளி உலவுங்காறும் ஒளிவீசி, மடியாகிய கரிக்காற்றுப் புகுந்தவுடன் அவிந்துபோகும். விளக்கணைந்தால் மீட்டும் ஏற்றிக்கொள்ளலாம். ஆனால் குடிப்பெருமை குன்றின் மீண்டும் அதனைப் பெறுதல் இயலாது என்பதை விளக்க, 'மாய்ந்து கெடும்' என்று ஆய்ந்து கூறிய வள்ளுவர் மதிநலம் அதிநுட்பமுடையதன்றோ!

ஒருவன் தான் பிறந்த குடியை மேன்மேலும் உயர்ந்தோங்குமாறு செய்யும் உறுதியுடையானாயின் மடியை அடியோடு ஒழிக்கவேண்டும். நெருப்பைப் போல் கொடியது வேறின்மையால் நெருப்பை நெருப்பாகவே நினைக்க என்பதுபோல மடியினைப் போல் கொடியது பிறிதின்மையால் மடியை மடியாகவே கருதி நடக்க என்று குறித்தார் திருவள்ளுவர்.

நெருப்பை மடியிற் கட்டியதுபோலச் சோம்பலைச் சொந்தப் பொருளாகக் கொண்டவன் பெரும் பேதை யாவான். அவன் அழிவது உறுதி. அவனுக்கு முன்னால் அவனது குடியும் அழிந்தொழியும் என்று அறிவுறுத்தினர் பெருநாவலர். அங்ஙனம் குடி மடிவது மட்டுமன்றிப் பல்வேறு குற்றங்கள் அவனை வந்தடை யும் என்றும் குறிப்பிட்டார்.

குடிப்பெருமையைக் கெடுக்கும் குற்றம் சிறிதும் சேராதவாறு ஒருவன் தனது குடியைக் காக்க வேண்டும். வந்த குற்றம் ஒன்றுதானே, சிறிதுதானே, இதற்கென்ன செய்வது என்று ஒருவன் சோம்பி யிருப்பானாயின் உறுவது பேரிழிவாகும். அவ் இழிநிலை வந்துற்றால் அதனையறிந்த பகலே அவன் இறந் தொழிவான் என்றார் முன்றுறையரையனர்.

> ‘அன்றைப் பகலேயும் வாழ்கலார் நின்றது
> சென்றது பேரா தவர்.’

என்பது பழமொழிப் பாடலாகும்.

சோம்பல் உடையவனுக்குச் சுவர்க்க இன்பம் தானே வந்தடைந்தாலும் அதனால் அவன் பயனெய்த மாட்டான். நிலமுழுதாளும் பெருவேந்தர் செல்வம், மடியுடையார்க்குத் தானே வந்துற்றாலும் அதனால் பயனெய்தார் என்பர் வள்ளுவர்.

> ‘படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
> மாண்பயன் எய்தல் அரிது.’

என்பது அவர் சொல்லமுதமாகும்.

முயற்சியின்றி அயர்ச்சியுடன் சோம்பித் திரிவா ரைச் சோர்வகற்றுமாறு நண்பர்கள் பலகால் இடித்

துரைப்பர். எத்தனை அறிவுரை கூறினும் அவர் உள்ளத்தில் ஏருமையின் பின்னர் இகழ்ந்துரைப்பர். நண்பர்கள் இகழ்ந்துரைக்கத் தலைப்பட்டால் அயல வரும் இகழ்வது இயல்பன்றோ! அவற்றிற்கெல்லாம் மறுமொழி பகரும் வல்லமை இல்லாமையால் மடியுடை யார் வாளா இருப்பர் என்றார் வள்ளுவர். மேலும் அவர் பகைவர்க்கு அடிமையாவர்.

ஒருவனது மடியால் குடிமைக்குமட்டுமே யன்றி அவனது ஆண்மைக்கும் குற்றம் உண்டாகும். அம் மடியினை ஒழித்து ஊக்கத்தைப் பெருக்கவே அதனால் விளைந்த குற்றங்கள் அகல்வனவாகும். மடியில்லாத மன்னவன், மாலோன் தாவியளந்த மூவுலகும் ஒருங்கே பெறுவான் என்பார் பெருநாவலர்.

'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.'

என்பது அப்புலவரின் பொய்யாமொழி.

சோம்பேறிகள் சிலர் சிறிதும் உழைப்பின்றிக் கடவுள் கொடுப்பார் என்று கருதித் திரிவர். அவர்கள் செல்வத்தை அடைவது எங்ஙனம்? பாத்திரத்தில் உள்ள பாற்சோற்றைக் கையால் எடுத்துண்டா லன்றோ ஒருவனது கடும்பசி ஒழியும்! அதனை முன்னால் வைத்துக் கண்ணால் நோக்கிக்கொண்டிருந் தால் அப் பசிப்பிணி அகல்வதுண்டோ? இல்லை யல்லவா! அங்ஙனமே ஒருவன் முயற்சியின்றிப் பெரு மடியுடையானாயக் கிடப்பனாயின் அவன் வாழ்வு வளம் பெறாது என்பது உறுதி. இதனை விளக்கவந்த மகா வித்துவான் பிள்ளையவர்கள்,

'கடவுளி குவனென் றெண்ணிநித் தியமும்
கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வம் அடைகுவ னேகொல்
அருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுடைக் கரத்தால் எடுத்துண தெங்ஙன்
வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்பன்
உடல்பவந் தனக்கோ ராகர மாகும்
உடல்நனி வாட்டுமெய்த் தவத்தோய்.'

என்று பாடியுள்ளனர்.

எறும்பு முதலான எந்த உயிரினங்களை நோக்கி ஞலும் அவைகள் தத்தம் வாழ்வைத் தக்கவாறு நடத்திக்கொள்ள உழைத்து வருவதைக் காண்கிறோம். அங்ஙனமிருக்கவும் ஆறறிவு படைத்த மக்களுட் சிலர் உடம்பை அசைக்கவும் விரும்பாதவராய் மடி நிறைந்து வாழ்கின்றனர். அவர்கள் உயிருடைய ராயினும் பிணங்கள் அல்லது அசையாப் பொருள்கள் என்றே கொள்ளவேண்டும் என்று கூறினர் வேதநாயகர் :

'சிற்றெறும் பாதியாச் சீவ கோடிகள்
முற்றுமெய் யுழைத்துயிர் முறையிற் காக்குமால்
சற்றுமெய் யசைவிலாச் சழக்க ராருயிர்
அற்றவோர் சவங்கொல்மற் றசரமே கொலோ!'

என்பது அவர் நீதிநூற் பாடலாகும்.

மேலும், அவ் வேதநாயகர், மடியுடையார் அடையும் அல்லல்களையும் குறிப்பிட்டார். அவர்கட்கு ஒரு நாளும் வறுமை யொழியாது. அவர்கள் உள்ளத்தே கொடுந்துயரங்கள் அகலாமல் குடிகொண்டுவிடும். பழிபாவங்களைப் பெருக்கும் குற்றங்கள் பல, அவர்களிடம் வளர்ந்துகொண்டேயிருக்கும் என்று வகுத்தோதினர் அந்நீதிபதி.

'மடிசே ருமவர்க் கொருநா ளுமறல்
விடியா தவர்நெஞ் சிடைவெந் துயரே
குடியா குமறந் தொடர்குற் றமெலாம்
நெடிதா கவளர்ந் திடுநிச் சயமே.'

இத்தகைய கொடுமைவாய்ந்த மடிமையால் துயிலும் மறதியும் காலத்தாழ்வும் ஒருவனைத் தொடர்ந்து பற்றித் தொல்லையுள் தள்ளுவனவாம். மடியுடையான் உண்டுண்டு உறங்குவதே இன்பமெனக் கொண்டு உழல்வான். அத்தகையானுக்குச் சொல்லுவன எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலிக்கு ஒப்பாகும்; எவையேனும் மனத்தில் ஏறினும் அந்தக் கணத்திலேயே அவற்றையும் மறந்துவிடுவான். இம் மறதியினைத் திருவள்ளுவர் 'பொச்சாப்பு' என்று குறிப்பிடுவார். அதனைப் பொச்சாவாமை என்னும் அதிகாரத்தால் கண்டித்துரைப்பார். இப் பொச்சாப்பு, அரசர்க்கு உளதாயின் விளையும் பொல்லாங்கு பெரிதாகும் என்பார் அப் பொய்யில் புலவர். அரசர்க்கு மறதியால் விளையும் கேடு, மக்களையும் சூழ்ந்து வருத்துமாதலின் அதனை அரசியலில் வைத்துத் தக்கவாறு விளக்குகிறார்.

மறதியின் தோற்றத்திற்குக் காரணம் கூறவந்த வள்ளுவர் அளவிறந்த உவகையும் மறதியை விளைக்கும் என்றார். உருவாலும் திருவாலும் வலியாலும் பெருமையுற்ற மன்னர் தற்காத்தல், பகையழித்தல் முதலிய செயல்களில் சோர்வுற்று மறந்திருப்பர். அத்தகைய மறதியால் விளையும் கேட்டிற்கு எல்லை, அளவிறந்த சினத்தால் விளையும் தீங்கினும் பொல்லாதாகும் என்றார் வள்ளுவர். சினமோ சேர்ந்தாரைக் கொல்லும் தீமையுடையது. அளவிறந்த சினம்

விளைக்கும் அல்லலுக்கும் எல்லையுண்டோ? அதைக் காட்டினும் கொடியது செருக்கால் தோன்றிய மறதி.

‘இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.’

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

அறிவுடையான் ஒருவனுக்கு ஊழ்வினையால் நாள்தோறும் பிச்சையெடுத்து வாழ்வு நடத்தும் வறிய நிலை ஏற்படுமாயின் அவன் அறிவும் புகழும் விரைவில் மறைந்தொழியுமன்றோ! அதுபோலவே புகழுடையான் ஒருவன்பால் மறதி பொருந்துமாயின் அவன் தன் புகழைக் காக்கும் செயல்களில் அயர் வுடையவனாய்ப் பிறரால் இகழப்படுவான். ஆதலின் பொச்சாப்பு உடையார்க்குப் புகழுண்டாக வழியில்லை; இஃது அறநூலுடையார் அனைவர்க்கும் ஒத்த துணிபே என்று உரைத்தருளினார் திருவள்ளுவர்.

‘பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுவுலகத்(து)
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.’

என்பது அவர் சொல்லமுதமாகும். நூலின் துணி வென்னுமல் நூலோர் துணிவு என்றதன் நுட்பம் உணரத்தக்கதாகும். நூலோர் நூலறிவும் அனுபவ அறிவும் எண்ணி யாராயும் நுண்ணறிவும் பெற்றோ ராதலின் அவர் கருத்துப் பிறரால் மறுத்துக் கூற முடியாத உறுதியுடையதாகும்.

வலிமை வாய்ந்த அரணுள் வாழும் வீரர் அச்ச முடையரானல் அவர்க்கு அவ் அரணுல் பயனில்லை. அதுபோலவே பல்வகைச் செல்வமும் உடைய ராயினும் மனத்தின்கண் மறதியுடையார்க்கு அச் செல்வங்களால் பயனில்லை. ‘இறந்தால் போச்சு

மூச்சு, மறந்தால் போச்சு காசு' என்பது பழமொழி யாகும். ஒருவன் தன்னால் காக்கத் தக்க துன்பங்களை அவை வருதற்கு முன்பே தெரிந்து காக்கவேண்டும். அங்ஙனம் காவாதான் வாழ்வு, சிறிய நெருப்பின்முன் அகப்பட்ட பெரிய வைக்கோற்போர் போன்று அடியோடு அழிந்துபோகும் என்று மொழிந்தருளினர் அருந்தமிழ்ப் புலவர். அங்ஙனம் காக்க மறந்தவன், பின் துன்பங்கள் வந்த காலத்தில் அவற்றை விலக்க முடியாது தனது பிழையினை எண்ணிப் பெரிதும் இரங்குவான்.

> 'முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
> பின்னூ றிரங்கி விடும்.'

என்பது வள்ளுவர் சொல்லமுதமாகும்.

அறநூலுடையார் அரசர்க்குரிய செயல்களாக வகுத்துரைத்தவற்றை மறவாது கடைப்பிடித்து ஒழுகவேண்டும். அங்ஙனம் செய்யாது மறந்தவர்க்கு எழு பிறப்பும் நன்மை ஏற்படாது என்றார் திரு வள்ளுவர். மன்னர்களிடம் மறவாமைக் குணம் ஒழிவின்றி அமையுமாயின் அதனை ஒக்கும் நன்மை வேறில்லை; அவர்கட்கு அரியவென்று முடியாத காரியங்கள் எவையும் இலவாகும்; எதனையும் எளிதில் முடிக்கும் வல்லமை பெறுவார் என்றார் வள்ளுவர்.

மன்னர்கள் தமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கால் செருக்குற்று இன்புறுங்காலத்து, முன் னாளில் அந்நிலையால் அழிவுற்ற மன்னர்களைச் சிறிது எண்ணுவாராக. அங்ஙனம் எண்ணுவாராயின் மறதி யைப் பெருக்கும் செருக்கை மறப்பார் என்று உரைப்பார் திருவள்ளுவர்.

'இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.'

என்பது அவர் சொல்லமுதமாகும். இரணியன், சூரபதுமன், இராவணன், துரியோதனன், சச்சந்தன் முதலான பெருவேந்தர்கள் தாம் பெற்ற வரத்தாலும் வலத்தாலும் நலத்தாலும் செருக்குற்றுத் திரிந்தனர். அச் செருக்கால் அவர்கள் தம் செயல் மறந்து சீரழிந்தனர். இவர்கள் அழிவுற்ற நிகழ்ச்சிகளைச் செருக்குற்றூர் அறிவுற்றுச் சிறிதே நினைவாராயின் அவ் அழிவினின்று தப்புவார் என்பார் நம் ஒப்பில் புலவர்.

மறதியைப் போக்கும் மருந்துண்டா? என்பார்க்கு வள்ளுவர் மருந்தும் தெரிந்துரைக்கிறூர். 'மறதி என்பது மனிதர்க்கு இயல்பு' என்று புதுமொழி புனைந் துரைப்பார் தற்காலத்தவர். 'வயது ஏற ஏற இம் மறதி வந்துவிடுகிறது' என்பார் வேறு சிலர். இங்ஙனம் விலக்கமுடியாத மறதியை விலக்குதற்கு வழி வகுக் கிறூர் நம் வள்ளுவர்.

'உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்.'

என்பது அவர் சொல்லமுதமன்றே! அவரே, 'ஒன்றை எண்ணியார் திண்ணியராயின் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்' என்று இயம்புவார். ஒன்றைப் பலகால் ஒருவன் நினைவுக்குக் கொணர்வானு யின் அவனிடம் மறதி ஏற்படாது. அங்ஙனம் மறவாது பதித்த நினைவால் பெறுதற்கு விரும்பிய பொருளை உறுதியாகப் பெற்றுவிடலாம் என்றூர் பெருநாவலர். அங்ஙனம் வெற்றி கண்டவனே வாழ்வில் ஒரு குறிக்

கோள் கொண்டவன் என்று கொண்டாடத் தக்கவன். அவன் கோளாளன் என்று குறிக்கப்பெறுவான். அவனுக்கு இலக்கணம் சொல்லிய நல்லாதனார்,

'கோளாளன் என்பான் மறவாதான்.'

என்று குறித்தருளினார்.

# எ. அமைச்சும் அங்கமும்

நாட்டைத் திறம்பட ஆளும் அரும்பெறல் தலைவர்க்கு அங்கமாக அமைவன ஆறு. அவை அனைத்தும் நன்கு அமையப்பெற்ற தலைவன் அரசருள் ஏறனையான் என்று கூறினார் தெய்வப்புலவர். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறுமே அவ் அங்கங்களாம். இவ் ஆறனுள்ளும் முதன்மையானது அமைச்சே. நாட்டை ஆளும் பொறுப்பில் மன்னற்கு இணையான மாண்பு மதியமைச்சனுக்கு உண்டு. ஆதலின் அரசின் அங்கங்களை விளக்கத் தொடங்கிய திருவள்ளுவர் அமைச்சிற்கே முதலிடம் கொடுத்தார்.

> 'சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
> சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.'

என்பது அவர் சொல்லமுதம்.

அரசியலில் தக்க அறிவுரைகளை ஆராய்ந்து கூறும் பேரறிவாளராகிய அமைச்சர், அரசனுக்குக் கண்போல் உதவும் அருமையுடையர். அவர்களே நாட்டிற்கேற்ற நல்லாட்சி முறையினைத் தேர்ந்து அமைப்பவர். அதனாலேயே அமைச்சர் என்னும் பெயர் பெற்றார். இதனை அமாத்தியர் என்னும் வடசொல்லின் திரிபு என்பார் சிலர். அமாத்தியர் என்னும் வடசொல் அரசர்க்கு அண்மையில் அமர்ந்திருப்போர் என்ற பொருளைத் தரும். இக் கருத்துப் பற்றியே வள்ளுவரும் தம் நூலுள் அமைச்சனுக்கு 'உழையிருந்தான்' என்ற ஒரு பெயரைக் குறிப்பிடுகிறார் என்பர்.

'அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.'

என்பது அக் கருத்தை அரண்செய்யும் குறளாகும்.

அரசன் உழையிருந்தே உறுதி உரைக்கவல்ல அமைச்சரது இயல்பைத் திருவள்ளுவர் பத்து அதிகாரங்களில் நூறு பாக்களால் சீரிதின் விளக்குகின்றார். குடியரசு நிலவியுள்ள நம் பாரதநாட்டில் எத்தகையினரும் அமைச்சராதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. ஆதலின் அமைச்சராக இருப்போரும் அமைச்சராக முயல்வோரும் வள்ளுவர் வழங்கியுள்ள உலகப் பொதுமறையில் காணும் அமைச்சியலை மட்டுமேனும் ஆய்ந்துணரக் கடமைப்பட்டவராவர். அப் பகுதியில் உள்ள நூறு பாக்களின் இருநூறு வரிகளையும் அவர்கள் கற்று உணர்தல் இன்றியமையாததாகும்.

அரசியலிலேயே ஊறித் திளைத்த பேரறிவாளராகிய வள்ளுவர் பெருமான், அமைச்சரைப் பற்றி அரசியலிலும் பொதுவாகக் கூறிப் போந்தார். அமைச்சராவார் அரசியல் அறத்தின் நுட்ப திட்பங்களைத் தெளிவாகத் தெரிந்திருத்தல்வேண்டும். அவர்கள் அறிவு, ஒழுக்கம், பருவம் முதலியவற்றால் அரசனைக் காட்டிலும் மூத்திருக்கவேண்டும்; தெய்வத்தாலோ மக்களாலோ அரசனுக்கு வந்த அல்லல்களை அகற்ற வல்லராக இருக்கவேண்டும்; அத்தகைய துன்பங்கள் பின்னரும் வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல ஆற்றலைப் பெற்றிருக்கவேண்டும்; அரசன்பால் தீச்செயல்களைக் கண்டால் அஞ்சாது இடித்து உரைக்கும் இயல்புடையராய் இருக்கவேண்டும்

இத்தகைய நல்லியல்புகள் வாய்ந்த நல்லமைச்சர், அரசற்குத் துணையாய் அமைதல் வன்மையுள் வன்மையாக மதிக்கத்தகும். இங்ஙனம் அரசியலில் அமைச்சர்க்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர், அமைச்சியலில் அதற்குத் தக்க விளக்கம் தருகின்றார்.

அமைச்சுத் தொழிலுக்கு அங்கமாய் அமைவன ஐந்து. படையும் பொருளுமாகிய கருவிகள் இரண்டு, வினைசெய்தற்குரிய காலம், அதனைச் செய்து முடிக்கும் இடம், செய்யும் அரிய செயல் ஆகிய ஐந்தும், மந்திரித் தொழிலுக்கு அங்கம் என்றே வடநூலார் குறிப்பர். ஒரு செயலைப் புரியுங்கால் இடையில் தளராத உளவுறுதி, குடிமக்களை இனிது காக்கும் இயல்பு, நீதிநூல்களை ஓதித் தேர்ந்து செய்வனவும் தவிர்வனவும் தெரிதல், அயராத முயற்சி ஆகிய இயல்புகள் அவர்பால் அமைந்திருத்தல் வேண்டும். அரசியல் வினைகளை யாற்றும் அமைச்சர்க்குப் பழிப்புரையும் இழிப்புரையும் பிறப்பது இயற்கை. அன்னார் அவற்றைக் கேட்டு அஞ்சி நெஞ்சம் தளர்தல் தகாது. ஆதலின் வன்கண்மை ஆகிய மனவுறுதியினை அமைச்சர் இயல்புகளுள் முதற்கண் வைத்து மொழிந்தார் நம் முதற்பாவலர்.

'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட(து) அமைச்சு.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

நாட்டின் நலங்கருதி, அமைச்சராயினோர் செயலாற்றத் தொடங்குங்கால் மாற்றார் அதற்குக் கேடு சூழ்வர். அப்பொழுது மாற்றாரின் ஆற்றலைக் குறைத்தற்கு அவர்க்குத் துணையாவாரைத் தந்திரமாகப் பிரித்

தல்வேண்டும். தம்மைச் சார்ந்தவர்கள் பிரிந்துபோகா வண்ணம் இயைந்த பொருட்கொடையாலும் இன் சொற்களாலும் பேணிக்கொள்ளவேண்டும். முன்னர்த் தம்மைச் சார்ந்திருந்து பின்னர்ப் பிரிந்து போயினரை மேலும் சேர்த்துக்கொள்ளவேண்டுமாயின் அதனையும் ஆய்ந்து செய்தல்வேண்டும். இவற்றுள் காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ற செயலை அறிந்து ஆற்றவேண்டும். அதனை மாற்றார் அறியாமல் ஏற்ற உபாயத்தால் செய்துமுடித்தலும் வேண்டும். அவ்வாறு செயலாற்றுதல் பெரிதும் அரிதாகும். ஆதலின் இவையெல்லாம் வல்லவனே அமைச்சனாவான் என்று சொல்லிப் போந்தார் வள்ளுவர். இக் கருத்துக்களை விநாயக புராண ஆசிரியர் சிறிது விளக்கமாகக் குறித்து வலியுறுத்துகின்றார்:

'பகைவர்தம் துணையைப் பிரித்தல்தம் மிடத்துப்
பயின்றவர் பகைவர்பால் புகாமல்
தகையுறச் செய்தல் பிரிந்தவர் தம்மைத்
தம்மொடு பொருத்தலும் அமைச்சாம்.'

என்பது அவ் ஆசிரியர் வாக்கு.

இனி, அமைச்சர் ஒரு செயலாற்றுமிடத்துத் தம் அரசினைச் சார்ந்து உட்பகையாக நின்றே ஊறு செய்வாரைப் பிரித்தலும் வேண்டும். பகைவரை விட்டுப் பிரிந்தாரைத் தம்மொடு பேணிச் சேர்த்துக் கொள்ளுதலால் பெருநலம் விளையுமாயின் அதனையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

ஒரு காரியத்தைச் செய்து முடிக்கப் பல வழிகள் இருக்கலாம். அவற்றுள் தக்க வழி எதுவென நன்கு எண்ணிச் செய்தல் வேண்டும். அதனைச்செய்யுங்கால்

சிறந்த பயனைத் தரும் வகையைத் தெரிந்து புரிய வேண்டும். எந்தக் கருத்தையும் ஐயத்திற்கு இடமின்றிப் பிறர்க்குத் துணிவு பிறக்குமாறு தெளிவுறப் பேசுதல் வேண்டும். இத்தகைய வல்லமைகள் எல்லாம் இனிது வாய்க்கப் பெற்ற அமைச்சர் அரசியல் அறங்களை நூல்களாலும் அனுபவத்தாலும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அன்னர் கல்வியறிவால் நிறைந்து விளங்குதல் வேண்டும். அரசனது ஆட்சிச் செல்வம் சுருங்கிய காலத்தும் பெருகிய காலத்தும் இடைப்பட்ட நிலையில் இருந்த காலத்தும் அவ்வந்நிலைக்கேற்பச் செயல் புரியும் திறங்களைத் தேர்ந்து அறிய வேண்டும். எத்துணைத் திறமைகள் அமைந்தவராயினும் அரசற்கு அமைச்சர் அடங்கிப் பணிந்து நின்றே பேசவேண்டும். ஆதலின் அவரை 'அமைந்த சொல்லார்' என்று குறிப்பிட்டார் திருவள்ளுவர்.

மேற்சொல்லிய வல்லமை எல்லாம், இயற்கையான நுண்ணறிவும் செய்கையான நூலறிவும் செம்மையாக வாய்த்த அமைச்சர்க்கே அமைவனவாகும். இவ் இருபேரறிவும் பெற்ற திருவுடைய அமைச்சரை வெல்லுதல் அரிதாகும். அவர்கள் பகைவர் சூழ்வனவற்றைத் தாம் அறிந்து அழிப்பர்; அப்பகைவர் அறிந்து அழியாதனவற்றைத் தாம் சூழ்வர். ஆதலின் திருவள்ளுவர்,

'மதிநுட்பம் நூலோ(டு) உடையார்க்(கு) அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.'

என்று உறுதி தோன்ற உரைத்தருளினர். நூலறிவினும் இயற்கையாக அமைந்த நுண்ணறிவே அமைச்சர்க்கு மேன்மை அளிப்பதாகும்.

'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.'

என்பது வள்ளுவர் சொல்லமுதம் அன்றோ !

நூலறிவும் நுண்ணறிவும் சால அமையப்பெற்ற அமைச்சர்க்கு உலகறிவும் வேண்டற்பாலதாகும். அவர்கள் ஒரு செயலைத் தொடங்குங்கால் அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு திருந்தச் செய்தல் வேண்டும். உலக நெறிக்கு ஒவ்வாத செயல்களைச் செய்தால் மக்களின் பழிக்கு ஆளாவர் அமைச்சர். உலகத்தோடு பொருந்த ஒழுகும் வகையறியார் பல கற்றும் அறிவற்றவரே என்பது வள்ளுவர் உள்ளமன்றோ! சிறந்த அறிவிற்கு இலக்கணமே உலகத்தோடு பொருந்த ஒழுகுவதுதான் என்பார் அப்புலவர் :

'உலகத்தார் உண்டென்ப(து) இல்லென்பான் வையத்(து)
அலகையா வைக்கப் படும்.'

என்பது அவர் சொல்லமுதம். உலகறிவு இல்லார்க்குப் பேய் என்றே பெயர்கொடுத்து விடுகிறார் அப்பெருநாவலர். ஏட்டுக் கல்வியினும் நாட்டு நடப்பை அறிவது நன்மை பயப்பதாகும்.

வள்ளுவர் அமைச்சரது கடனை ஒரு குறட்பாவில் நன்கு வரையறுத்து வலியுறுத்துகின்றார். அரசன் தனது ஆணவத்தால் அறிவுடையார் கூறும் அறிவுரைகளை ஏற்காது அழிப்பதும் உண்டு. அவன் தானும் அறியாது தீங்கு இழைப்பதும் உண்டு. இத்தகைய அரசனின் குற்றங்களைக் கருதி அமைச்சராயினர் அவனை நீங்குதல் பாங்கன்று. அகலாதும்

அணுகாதும் நெருப்பில் குளிர்காய்வார் போல நின்று, நன்று விளக்கும் உறுதிமொழிகளை அரசற்கு இடித்துரைக்கும் கடன், அமைச்சரைச் சார்ந்ததாகும் என்று அறிவுறுத்தினர் தெய்வப் புலவர். அந்தக் கடனை அமைச்சர் ஆற்றுதற்குத் தயங்குவாராயின் அவ்அரசனது அழிவால் விளையும் பழியை உலகம் அவ்அமைச்சர்மீதேயே சுமத்தும். ஆதலின் அமைச்சர் கடமையை,

> 'அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
> உழைஇருந்தான் கூறல் கடன்.'

என்று தெளிவாக வலியுறுத்தினர்.

தமிழகத்தில் வழிவழியாகவே அமைச்சுரிமை தாங்கும் ஒருவகைப் பிராமண மரபினர் இருந்தார் போலும். அவர்கள் அமாத்தியப் பிராமணர் என்று அழைக்கப் பெற்றனர். அரிமர்த்தன பாண்டியன் என்னும் பாண்டி மன்னன் ஒருவனுக்கு முதலமைச்சராகத் திகழ்ந்த திருவாதவூரர் அமாத்தியப் பிராமணர் மரபில் அவதரித்தவர் என்று நூல்கள் நுவலும். அவர் தமது அமைச்சுத் திறமையால் 'தென்னவன் பிரமராயன்' என்னும் விருது பெற்று விளங்கினர். அவரே மாணிக்கவாசகராய் மாநிலம் உய்யத் திருவாசகம் அருளிய பெருமானவர்.

இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாய சோழனால் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற தெய்வப் புலமைச் சேக்கிழார், வாக்கில் வல்ல வாய்மையாளர். தில்லைக் கூத்தன் திருவடித் தாமரையில் ஊறும் தீந்தேனைப் பருகும் வண்டு போன்றவனாகிய மன்னன் அநபாயன், சமண காவியமாகிய சீவக

சிந்தாமணியிடத்துச் சிந்தையைச் செலுத்தியிருப்பதை அச்சேக்கிழார் நோக்கினர். சிற்றின்ப விழைவினைப் பெருக்கும் அச்சிந்தாமணிக் காவியப் பற்றால் அரசன் சிந்தை சிதையுமென நினைந்தார். அவன் அவ்வுண்மையை அறியானாயினும் உறுதி கூறுதல் உழையிருக்கும் தமது உற்றகடன் என்பதைத் தெற்றெனத் தெரிந்தார் சேக்கிழார். உடன் தமது கருத்தை அஞ்சாது அரசற்கு எடுத்தோதினர். கைம்மாறு கருதாது கடவுள் தொண்டாற்றிச் சிவபெருமான் திருவடிப்பேறெய்திய அடியார்களின் வரலாற்றைப் பத்தியுடன் படிக்குமாறு செய்தார். அரியதோர் காவியமாகிய பெரிய புராணத்தையே அவன்பொருட்டு ஆக்கி உதவினர். இத்தகைய சேக்கிழார் பெருமான் கடமை தவறாத பெருமை வாய்ந்த அமைச்சரல்லரோ!

ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட கூன் பாண்டியற்குக் குலச்சிறையார் என்பார் நல்லமைச்சராக விளங்கினர். மன்னன் சமண மாக்களின் தீவலைப்பட்டு, நாட்டை இன்னலுக்கு உள்ளாக்கும் நிலையினைக் குலச்சிறையார் தெள்ளிதின் உணர்ந்தார்.

'நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்(று) ஒளியினில் விளங்கும்
மேன்மையும்'

படைத்தற் பொருட்டுப் பரசமய கோளரியாம் ஞானசம்பந்தப் பெருமானைப் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளுமாறு செய்தார். பாண்டிமாதேவிக்குத் துணையாய் நின்று இணையிலாப் பணிபுரிந்து நாட்

டையும் மன்னனையும் நல்வழியில் கூட்டினர். அதனலேயே ஞானசம்பந்தரும் நற்றமிழ்ப் பாவால் நயந்து போற்றும் சிறப்பினைக் குலச்சிறையார் கொண்டனர்.

இத்தகைய நல்லமைச்சரின் இயல்பை எல்லாம் ஒருங்கு சொல்லப் புகுந்த கவியரசராகிய கம்பநாடர்,

'தம்முயிர்க்(கு) இறுதி எண்ணார்
 தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
 விடாது நின்(று) உரைக்கும் வீரர்
செம்மையில் திறம்பல் செல்லாத்
 தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார்
 ஒருமையே மொழியும் நீரார்.'

என்று ஒரு பாடலில் அழகுற உரைத்தருளினர். அரசற்கு அறத்தை எடுத்துரைக்குங்கால் அறியாமையால் அரசன் அமைச்சரை வெகுளலும் கூடும். அவனது சினத்திக்கு அஞ்சாது உறுதி பயக்கும் செஞ்சொல்லை அமைச்சர் அறிவுறுத்தல் கடனாகும். அதனால் தம் முயிர்க்கு அழிவு ஏற்படுமோ என்று அமைச்சர் கலங்குதல் தகாது. அங்ஙனம் தம் உயிர்க்கு அழிவே ஏற்பட்டாலும் அதனைப் பொருட்படுத்தாது அறத்தின் வழுவாத நீதியை அரசனுக்கு ஓதியே தீரவேண்டும். அவர்கள் முக்காலமும் உணர வல்ல தக்காராயும் நன்று விளக்கும் ஒன்றையே உறுதியாக நின்று உரைக்கும் மிக்காராயும் இருக்க வேண்டும். இக் கருத்துக்களைக் கச்சியப்பரும் நன்கு வலியுறுத்துகின்றார் :

' மன்னவர் செவியழல் மடுத்த தாமென
 நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்

சொன்னவர் அமைச்சர்கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவா(று) உரைக்கின் றார்களே.'

அரசற்கு நீதியை இடித்துரைக்கும் ஆற்றல் உடையாரே நல்லமைச்சராவர். மற்றையோர் உடனிருந்தே கேடு சூழும் உட்பகைவர் என்றார் கச்சியப்பர். அங்ஙனம் பக்கத்தில் இருந்தே அரசற்குப் பழுதெண்ணும் மந்திரி, பகைவரைக்காட்டினும் பல கோடி மடங்கு கொடியன் என்று குறித்தார் திருவள்ளுவர்.

'பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும்.'

என்பது அவர் சொல்லமுதமாகும். வெளிப்படையாகக் காணும் பகைவரால் கேடு வாராவண்ணம் பாது காத்தல் முடியும். கூட இருந்தே குரல்வளையை நெரிக்கும் கொடியரைப் போன்ற உட்பகைவரால் வருங்கேட்டை உணர்தல் முடியாது. அதனை அறிந்து காத்தல் அரிதாகலின் உடனிருந்து ஊறு விளைக்கும் தீய அமைச்சரினும் எழுபதுகோடி பகைவர் இனியர் என்று உரைத்தார் தனிப்பெரும் புலவர்.

சிந்தாமணிக் காவியத்தில் பேசப்பெறும் அமைச்சனாகிய கட்டியங்காரன், ஏமாங்கத நாட்டு அரசனாகிய சச்சந்தனுக்குப் பழுதெண்ணும் மந்திரியாக இருந்தான். அவனுடைய ஆற்றலையும் நயவஞ்சகமாக நடித்த அரசப்பற்றையும் உண்மையென நம்பிய மன்னனாகிய சச்சந்தன் இச்சையுடன் ஆட்சிப் பொறுப்பு முழுதையுமே அவனுக்கு ஈந்தான். அரசியல் பாரத்தை அமைச்சன்பால் சுமத்திய சச்சந்தன் தன் கோப்பெருந்தேவியாகிய விசயை என்னும் வியத்தகும் எழிலாளுடன் அந்தப்புரத்திலேயே அந்தமிலா

இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்துகிடந்தான். இதனை ஏற்ற வாய்ப்பாக எண்ணிய கட்டியங்காரன், மன்னனைக் கொன்று மாபெரு நாட்டைத் தானே கட்டியாளத் திட்டமிட்டான். அங்ஙனமே அரசனையும் கொன்றொழித்தான் என்று அவ்வரலாறு கூறும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் படைப்பாகிய மனோன்மணீயத்தில் குடிலன் என்றொரு அமைச்சன் பேசப்படுகிறான். அந்நாடகக் காவியத்தில் வரும் பாண்டிய மன்னனாகிய சீவகனுக்கு வாய்த்த கொடிய அமைச்சன் குடிலன் ஆவான். அவன் பாண்டிய நாட்டு அரசாட்சியைப் பறித்துத், தானே அரசனாதற்குத் திட்டமிட்டுப் பெருஞ் சூழ்ச்சிகள் செய்தான். இதனை உடனிருந்தே கூர்ந்து நோக்கிவந்த குலகுருவாகிய சுந்தரமுனிவர் பாண்டியன் நலத்தைப் பாதுகாக்கும் பணியில் முனைந்து நின்று சிறந்த செயலாற்றினார். அதனால் பாண்டியனும் அவன் குலக்கொழுந்தாகிய மனோன்மணியும் காக்கப் பெற்றனர் என்று அக்கதை பகரும்.

மன்னற்கு இடித்துரைக்கும் மதியமைச்சர் மாண்பை விளக்கவந்த முன்றுறையரையனார் என்னும் முதுதமிழ்ப் புலவர் நல்லமைச்சருக்கு ஓர் உவமை கூறினார். பாலுண்ணாது ஓலமிட்டு அழும் குழந்தையை அலைத்துப் பாலூட்டும் தாயனையர் நல்லமைச்சர் என்றார் அப்புலவர்.

> 'உலப்பில் உலகத்(து) உறுதியை நோக்கிக்
> குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்
> மலைத்தழு(து) உண்ணாக் குழவியைத் தாயர்
> அலைத்துப்பால் பெய்து விடல்.'

என்பது அவர்தம் பழமொழிப் பாடலாகும்.

நீதிநெறிகளை விளக்கி உலகிற்கு ஓதி யருளிய குமரகுருபரர் நல்லமைச்சர்க்கு மற்ஞோர் உவமையைக் குறிப்பிடுகின்ருர். யானையை அடக்கிச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்த பாகனை ஒப்பான் பண்புடைய அமைச்சன் என்று பகர்ந்தார் அப்புலவர். மதங் கொண்ட யானை எத்துணைக் கொடியதாக வயமிழந்து செல்லினும் அதனைத் தன் வயப்படுத்தவே பாகன் பெரிதும் முயல்வான். அஃதேபோல் அரசன் வயப் படாது அறவழியில் செலுத்தும் ஆற்றல் அமைச் சர்க்கு வேண்டும் என்று விளம்பினர்.

'செவிசுடச் சென்ருங்(கு) இடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா கவுண்மதத்த
கைம்மா வயத்ததோ பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு.'

என்பது அவரது நீதிநெறி விளக்கமாகும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்பான் தலைசிறந்த பழந்தமிழ்ப் பாண்டிய மன்னன். இவனது அரசவைப் புலவராக விளங்கிய மாபெரும் புலவர் மாங்குடி மருதனர். அவர் தம் வாழ்நாளில் பெரும்பகுதியை அம் மன்னனுக்கு உற்ற துணைவராய் விளங்கிக் கழித்தார். அம் மன்ன னுடனும் அவனுடைய அமைச்சர்களுடனும் இடை யருது பழகிய காரணத்தாலும் பண்பட்ட தம் நுண்ணிய அறிவாலும் அமைச்சர்க்கு வேண்டிய அரிய இயல்புகளையெல்லாம் தாம் பாடிய மதுரைக் காஞ்சி என்னும் இனிய நூலுள் சுருக்கமாகத் தொகுத்துச் சொல்லுகின்ருர்.

அரசனிடம் காணப்பெறும் நன்மை தீமைகளைப் பகுத்து உணரவேண்டும். அவற்றுள் தீயன விலக்கு

மாறு தெரிந்துரைக்க வேண்டும். அவனை நல்லாற்றில் செல்லுமாறு அடக்கி நடாத்தவேண்டும். அவன்பால் அன்பையும் அறத்தையும் தவறாமல் காத்தல் வேண்டும். தம்பால் பழி வாராது அறவழியில் செல்லுதல் வேண்டும். அதனால் பிறரினும் உயர்ந்து பெரும்புகழைப் பெறுதல்வேண்டும். இங்ஙனம் செயலாற்றிய திறத்தால் அரசனால் காவிதிப் பட்டமளித்துப் பாராட்டப்பெற வேண்டும். அன்னவரே செம்மை சான்ற நல்லமைச்சர் என்று குறித்தார் மாங்குடி மருதனார்.

> 'மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
> நன்றும் தீதும் கண்(டு) ஆய்ந்து அடக்கி
> அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
> பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
> செம்மை சான்ற காவிதி மாக்கள்.'

என்பது அவரது மதுரைக்காஞ்சிப் பகுதியாகும்.

இங்ஙனம் பழந் தமிழ் நூல்கள் அமைச்சர்க்கு இலக்கணம் வகுத்துரைப்பது போன்று எந்த நாட்டு அரசியல் நூலும் எம்மொழி அரசியல் நூலும் செம்மையுற எடுத்துச் செப்பவில்லை என்பது திட்பமாகும். தெய்வப் புலவராகிய திருவள்ளுவரோ அரச மரபில் பிறந்ததோடன்றி அரசற்கு உட்படு கருமத் தலைவராகப் பணியாற்றிய பரம்பரையினர். மேலும் அரசியல் அறநூல்களை முற்றக் கற்றுணர்ந்த மூதறிவாளர் அவர். ஆதலின் அவர்தம் நூலுள் வகுத்துள்ள அமைச்சியல் மிகவும் திட்ப நுட்பம் வாய்ந்ததாகும்.

# அ. அரணும் உரனும்

நாடாளும் வேந்தர்க்கு அறுவகை உறுப்புக்கள் அமையவேண்டும். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறும் சீரிதின் அமையப் பெற்ற செங்கோல் வேந்தனே பேரரசனுகை—அரசருள் ஏருகத் திகழமுடியும் என்ருர் திருவள்ளுவர்.

'படைகுடி கூழ்அமைச்சு நட்(பு)அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.'

என்பது அவர் சொல்லமுதமன்ரே !

இவ் அறுவகை உறுப்புக்களுள் சிறப்பு வாய்ந்த அரண், குறட்பாவில் இறுதியில் கூறப்பட்டாலும் நூலில் அதற்குத் தக்க இடமளித்தே நம் தமிழ் நாவலர் பேசுவார். பொருட்பாலில் அரசியலும் அமைச்சியலும் வகுத்தருளிய வள்ளுவர் அவ் அரசு அமைச்சுகளால் புரக்கப்பெறும் நாட்டினே, அவற்றை அடுத்து விரித்துரைத்தார். அந் நாட்டையடுத்தே அவரால் அரண் விளக்கப்படுகிறது. ஆதலின் அரசியல் உறுப்புக்களுள் அமைச்சு, நாடு, அரண் என்ற வைப்பு முறையால் அதற்குரிய இடத்தை, வள்ளுவர் கொடுத்துத்தான் வகுத்துரைக்கின்ருர்.

நீர்வளம், நிலவளம், மலேவளம், அலேவளம் ஆகிய நால்வகை வளங்களேயும் ஒரு நாடு பெரிதும் படைத்திருக்குமாயின் அந்நாட்டிற்குக் காவல் மிகவும் இன்றியமையாத ஒன்ருகும். ஆதலின் நாட்டிற்குப் பிற வளங்களாகிய உறுப்புக்களுடன் அரணும் ஓர் உறுப்பாகும் என்று குறிப்பிட்டார் திருவள்ளுவர்.

'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.'

என்பது அவர் சொல்லமுதம். பலவகை வளங்களும் நிறைந்த நாட்டின்மீது பிற நாட்டவர்க்குப் பெரு நாட்டம் இருப்பது இயற்கை. அவர்கள் பகைமை கொண்டு படையுடன் அந்நாட்டினைப் பற்றமுயல்வர். ஆதலின் அவர்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வளமுடைய நாட்டிற்கு வலமுடைய அரணம் வேண்டுவதாகும். அதனாலேயே வல்லரண், நாட்டிற்கு உறுப்பு என்று நவின்றருளினர் வள்ளுவர்.

அரண் என்பது காவல் என்ற பொருளைத் தரும் சொல்லாகும். அரச மாளிகைகளை இன்றும் அரண்மனை என்று சொல்லும் மரபுண்டு. 'எம் அம்பு கடிவிடுதும் நும் அரண்சேர்மின்' என்பது ஒரு புறப் பாடல் அடி. இவ்விடத்து 'அரண்' என்னும் சொல் 'காப்பான இடம்' என்ற பொருளையே தந்து நிற்கிறது. நாட்டிற்கு இன்றியமையாத பொருள்களையும் படைகளையும் பாதுகாத்து வைக்கும் இடமே அரண் எனப் படும். இதனை மதில் என்றும் கோட்டை யென்றும் குறிப்பதுண்டு. அரசர்க்குரிய தலைநகரங்களும் அவர் தம் மாளிகைகளும் அரண்களைப் பெற்றிருக்கும். அவை சிற்றரண், பேரரண் என்று இருவகைப்படும். சிற்றரணைக் குறும்பெனக் குறிப்பர். பேரரணை அருப்பம் என்று பேசுவர். பண்டை மன்னர்கள் அமைத்த அரண்கள் பல ஆங்காங்கு நம் நாட்டில் பாங்குற நிலவக் காண்கிறோம். அவற்றை இந்நாளில் கோட்டை யென்றே குறிப்பர்.

நாட்டிற்குப் பெருங்காவலாய் அமைந்தகோட்டைகள் நால்வகைப்படுவனவாகும். அவை நீரரண்,

நிலவரண், மலையரண், காட்டரண் என்பனவாகும். இந்நால்வகை அரண்களும் சில நாடுகட்கு இயற்கை யாகவே செம்மையுற அமைந்திருக்கும். இன்றேல் அவ் அரண்களைச் செயற்கையாகவும் அரசர் அமைத்துக்கொள்வர்.

> 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
> காடும் உடைய தரண்.'

என்பது வள்ளுவர் சொல்லமுதம்.

இந்நால்வகை அரண்களும் ஒன்றையொன்று அடுத்தும் தொடர்ந்தும் அமைந்திருப்பனவாகும். நீரரண் என்பது அகழியாகும். வற்றாத பேராறுகள், நாட்டின் நாலா பக்கங்களிலும் பாய்ந்துசெல்லு மானால் அவைகளே இயற்கையான நீரரணாக நிலவும். நான்கு பக்கமும் கடலாற் சூழப்பெற்ற நாடாக இருந்தாலும் அஃது இயற்கையான நீரரணைப் பெற்றதே. செய்ற்கையாக அமைக்கப்பெற்ற அகழி யில் பளிங்குபோல் விளங்கும் தெளிந்த நீர் நிறைந் திருக்கவேண்டும். அதனையே மணிநீர் என்று குறித் தார் வள்ளுவர். தெளிந்த நீர்தான் ஆழம் தெரியாத வாறு அடிநிலத்தை அண்மையில் உள்ளதாகக் காட்டிப் பகைவர்க்கு அழிவைத் தரும்.

நிலவரணாவது நீரும் நிழலும் இல்லாத வெள் ளிடையாக விளங்குவது. அஃது இடுமுள் புதைத்த மணற் பரப்பாக இருக்கும். பகைவர் கடக்கமுடியாத உயரத்துடன் நீண்டு செங்குத்தாக நிலவுவது மலையரண். பெரிய முள் மரங்கள் செறிந்து நிறைந்த பெருங்காடு சூழ்ந்திருப்பதே காட்டரண் எனப்படும். இதனை 'அணி நிழற் காடு' என்று குறித்தார்

திருவள்ளுவர். தண்ணிழல் உண்மையால் பகைவரைத் தன்னகப்படுத்தும் தன்மை, அக் காட்டரணுக்கு அமையவேண்டும். உள் நுழைந்தால் ஆடையணிகளையும் உடம்பையும் மயிரையும் அகப்படுத்தி ஊறு விளைக்கும் கூரிய முள்மரங்கள், புதர்கள் முதலியன ஆங்கு மொய்த்துக் காணப்பெறவேண்டும். இத்தகையதே சிறந்த காட்டரண் என்பதை அத்தொடரால் காட்டினார் வள்ளுவர்.

சிறுபஞ்சமூலம் என்னும் செந்தமிழ் நீதிநூல் வள்ளுவர் வகுக்கும் நால்வகை அரண்களோடு மற்றோர் அரணையும் குறிப்பிடுகிறது. நாட்டில் மன்னன்பால் பேரன்பு பூண்ட நன்மக்கள் பெரும்பான்மையராக இருப்பாராயின் அவர்களும் அரசனுக்கு அரண் போன்றவர் என்றது அந்நூல்:

> ‘நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்
> மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு—மாண்டவர்
> ஆய்ந்தன ஐந்தும் அரணுடையானை
> வேந்தனா நாட்டல் விதி.’

இவ் ஐவகை அரண்களும் உடையானே வேந்தன் என்று விளக்கியது. வேந்தன் என்ற சொல்லே முடி வேய்ந்த பேரரசனையே குறிக்குமன்றிக் குறுநிலம் ஆளும் சிற்றரசரைக் குறிப்பதன்று.

அரணது இலக்கணத்தையெல்லாம் திறனுற விளக்க வந்த திருவள்ளுவர் முதற்கண் அதனது இன்றியமையாமையை நன்றாகப் புலப்படுத்தினார். அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகையாற்றலும் நிரம்பிய முடிமன்னர் படைகொண்டு பகைவர் நாடு புகுவர். அவர்கள் பகைப்புலத்தின்மீது படை

யெடுக்குங்கால் தம் உரிமை, பொருள் முதலிய வற்றைப் பிறர் கவர்ந்துகொள்ளாமல் காப்புடன் வைத்துச் செல்லவேண்டும். ஆதலின் அன்னார்க்கு அரண் அவசியமாயிற்று. எவ்வகை ஆற்றலுமின்றித் தம்மைப் பகைவர் படையெடுப்பினின்று பாது காத்துக்கொள்ள முயல்வார்க்கும் அவ் அரணே சரணுய் அமைவது. ஆகவே படைவலியுடையார்க்கும் அஃது இல்லார்க்கும் அரண் இன்றியமையாது வேண்டப்படுவது என்பதை,

> ' ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
> போற்று பவர்க்கும் பொருள்.'

என்று கூறி வலியுறுத்தினர் வள்ளுவர்.

இனி, அரண் அமைப்புக் குறித்து அப் புலவர் பெருமான் புகலும் கருத்துக்களை நோக்குவோம். இயற்கையாகவோ செயற்கையாகவோ அமையப் பெற்ற நால்வகை அரண்களையும் கடந்து பகைவர் படை மதிலரணை அடைந்துவிடுமாயின் அம்மதில் பகைவரால் கடக்கலாகாத அருமையுடைத்தாதல் வேண்டும். மதிலைச் சூழ்ந்த வீரர் அம் மதிலின்மீது ஏணி வைத்து ஏறவும், அதனை உடைத்து உட்புகவும், சிதைத்துக் கைப்பற்றவும் முனைவர். ஆதலின் பகை வரது ஏணிக்கெட்டாத உயரமும், புறத்தோர்க்குத் தோண்ட முடியாத அடியகலமும், அகத்தோர்க்கு நின்று போர் செய்தற்கேற்ற தலையகலமும், கருவி களால் குத்திச் சிதைக்கமுடியாத திண்மையும், தன் பால்கொண்ட பொறிகளால் நெருங்குதற்கு முடியாத அருமையும் உடையதே உயர்ந்த மதிலரண். இங்ஙனம் அரணியல் கூறும் நூல்கள் அறிவிக்கின்றன என்று தெரிவித்தருளினர் திருவள்ளுவர்.

**'உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்**
**அமைவரண் என்றுரைக்கும் நூல்.'**

என்பது அவர் சொல்லமுதமாகும்.

மதிற்சுவரின் அடிப்படை அதன் உயரத்திற்குச் சமமான அளவாகவோ, பாதி அளவாகவோ, மூன்றில் ஒரு கூறு அளவாகவோ இருத்தல்வேண்டும். அதன் அகலம், உயரத்தில் பாதியளவு இருத்தல் வேண்டும். அதன் உயரம், பகைவரால் கடக்கலாகாத வாறு மிகவும் உயர்ந்திருக்கவேண்டும். இங்ஙனம் மதிலமைப்புப் பற்றிச் சுக்கிரநீதி சொல்லும்.

பகைவர் மதிலருகே நெருங்காதவாறு பற்பல பொறிகள் அதன்பால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்ட காலத்தில் மதுரைமாநகரின் மதிலிடத்தே அமைந் திருந்த அரும்பொறிகள் பலவற்றைச் சிலம்புக் காவியம் விளம்புகின்றது.

தானே வளைந்து அம்புகளை எய்யும் வலிய இயந்திர வில், குரங்குபோல் விளங்கிக் குறுகினரைக் கடிக்கும் கூர்மையான பொறி, கல்லுமிழும் கவண்பொறி, கவ ணுக்கு வேண்டும் கற்களைத் தாங்கும் கூடை, காய்ந்து சிதறிச் சேர்ந்தாரை வருத்தும் நெய்மிடாக் கள், பகைவர்மீது எறிந்து வருத்தும் எஃகு உருக்கு உருகும் உலைகள், மதிலைப் பற்றுவாரைக் கோத் திழுக்கும் தூண்டிற் பொறி, கழுத்தில் பூட்டி இழுத்து முறுக்கும் சங்கிலிப் பொறி, ஆண்டலைப் புள்ளின் வடிவில் பறந்து சென்று பகைவர் தலையைக் கொத்திக் கடிக்கும் பொறி, மதிலைப் பற்றி ஏறுவாரை மறியத் தள்ளும் இருப்புக்கவை, கழுக்கோல், அம்புப் பொதி,

ஏவறை, சிறிய அம்புகளை வைத்து எய்யும் கருவி, மதிலின் தலையைப் பற்றுவார் கைகளில் உறுத்தி வருத்தும் ஊசிப்பொறிகள், பாய்ந்து சென்று பகைவர் விழிகளைப் பறிக்கும் சிச்சிலிப் பறவை போன்ற பொறிகள், மதிலைப் பற்றுவார் உடலைப் பற்றிக் கிழிக்கும் பன்றி யனைய பொறிகள், பகைவர் மேல் ஓங்கி அடிக்கும் மூங்கிற் பொறிகள், மதிற் கதவுக்கு வலியாக அமைத்த எழுவெனும் மரங்கள், கணையமரம், கோல், குந்தம், வேல் இவைபோன்ற எண்ணிலாத பொறிகளை மதுரைப் பெருமதில் பெற்று விளங்கியது என்று இளங்கோவடிகள் குறிப்பிட் டுள்ளார்.

'மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறல் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்.'

என்பது சிலப்பதிகாரத்தில் மதிற்சிறப்புரைக்கும் பகுதியாகும்.

இவையே யன்றி நெருப்பினை உமிழ்ந்து நூற்று வரை ஒருங்கு கொல்லும் ஆற்றலுடைய சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப் பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி முதலாய பல்

வகைப் பொறிகளும் அரணிடத்தே அமைக்கப் பெறும் என்று சிந்தாமணிக் காவியம் செப்பும்.

அரணுக்கு வழியும் வாயிலும் ஒவ்வொன்றே இருத்தல் வேண்டும். வழி என்பது புறத்தோர் உணராதவண்ணம் வெளியே சென்று மீளும் சுருங்கைவழியாகும். வாயில் என்பது யாவரும் அறியப் போக்கு வரவு செய்தற்குரிய கோபுரவாயிலாகும். இத்தகைய வழி வாயில்கள் பலவாக அமைந்திருப்பின் காக்கவேண்டிய இடம் பலவாகிப் பகைவர்க்கு எளிதாகிவிடும். ஆதலின் அரணிடத்தே படைவீரர் கொண்டு காக்கவேண்டும் இடம் சுருக்கமாக இருக்க வேண்டும் என்று சொல்லியருளினர் வள்ளுவர்.

அரணைப் படைவலி படைத்த பகைவர் பன்னள் முற்றுகை செய்துகொண்டால் அவ்அரணுள் உறைவார் உண்ணல், உறங்கல், உணவாக்கல், படைப் பயிற்சி பெறுதல், படைக்கலங்களை அமைத்தல், உள்ளிருந்தே போர்புரிதல் முதலிய பல செயல்களுக்கும் பரந்து விரிந்த பேரிடம் அகத்தே அமைந்திருத்தல் வேண்டும். மேலும், அவ்அரண் தோற்றத்தால் பகைவர்க்குப் பேரச்சத்தை விளைக்கும் பெற்றியுடையதாக இருத்தல் வேண்டும். உயர்வு, அகலம், திண்மை, அருமை என்னும் நால்வகை அமைதிகளும் நன்கு பெற்று, முற்றுகையிட்ட பகைவர் நோக்கிய அளவில் முழுவலியும் இழக்குமாறு செய்ய வேண்டும். 'இவ் அரணை யாம் எவ்வாறு அழித்துக்கொள்ளவல்லோம்' என்று ஏங்கி அவர்கள் ஊக்கம் குன்றுமாறு செய்தல் வேண்டும். இத்தகைய அரண் அமைப்பு முறையை மிகவும் சுருங்கிய சொற்களால் சொல்லும் வள்ளுவர் வல்லமையை என்னென்பது !

'சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
ஊக்கம் அழிப்ப தரண்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

ஒரு நாட்டின்மேல் மற்றொரு நாடு படையெடுக்குமாயின் முதலில் அந்நாட்டுள் உணவுக் குறையைப் பகைவர் உண்டு பண்ணுவர். அயல் நாட்டிலிருந்து உணவுப் பொருள்கள் அந்நாட்டுள் வாராதவண்ணம் தடுப்பர். இஃது இப்பொழுதும் காணப்பெறும் போர் முறையாகும். திடீரென்று பகைவர் படைகள் ஒரு நாட்டு அரணை முற்றுகையிட்டுக் கொண்டால் அகத்துறைவார் புறத்தே போகவும் புறத்துச் சென்றார் உள்ளே புகவும் இயலாதன்றோ! அந்நிலையில் அகத்துறையும் படைவீரர் முதலாயினர்க்கு இன்றியமையாத உணவுப் பொருள் போன்றவை புறத்தேயிருந்து வருதற்கு வழியிலதாகும். பகைவர் முற்றுகை பன்னாள் நீடித்து அரணகத்தார் உயிர்வாழ உணவுக்கும் வகையற்று விடுமாயின் அன்னார் பகைவர்க்கு அடிபணிய வேண்டி வரும். ஆதலின் அரணகத்தார்க்கு வேண்டும் உணவுப் பொருள் மிகுதியும் தன்னகத்தே பெற்றிருக்கவேண்டும் என்று குறித்தார் பெருநாவலர்..

இஃதன்றி அகத்துறையும் படைவீரர் புறத்தார் மேல் செலுத்தும் படைகள் எளிதிற் சென்று தாக்குதற்குரிய முறையில் அரண் அமைந்திருக்க வேண்டும். புறத்துறையும் பகைவர் அரணுள் போக்கும் படைகள் அகத்தாரைத் தாக்காது தடுக்கும் தகுதியுடையதாகவும் அவ் அரண் அமைந்திருக்க வேண்டும். மதிலுள் நின்ற போராற்றும் வீரர்க்கு விசாலமான

பதணப் பரப்பும் வேண்டும். இவ்வியல்புகளை யெல்லாம் விளக்கப் போந்த பொய்யில் புலவர்,

> 'கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
> நிலைக்கெளிதாம் நீர தரண்.'

என்று கூறியருளினார்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பாரி பறம்புநாட்டை ஆண்டு வந்தான். முல்லைக் கொடிக்கும் நல்லருள் காட்டித் தனது பொற்றேரை வழங்கிய பெருவள்ளல் அவன். முந்நூறு ஊர்களைத் தன்னகத்தே கொண்ட அவனது பறம்பு நாடு, நாப்பண் அமைந்த பறம்பு மலையைச் சுற்றிப் பரந்து அமைந்திருந்தது. அவன் 'கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான்' என்று பாராட்டும் பெருமை பெற்றவன். குறுநில மன்னனாகிய பாரியின் பெரும்புகழ் பாரெங்கும் பரவி நிற்றலைக் கண்ட தமிழ் மூவேந்தரும் அவனது பறம்பு மலைக் கோட்டையைப் படையுடன் சென்று முற்றுகையிட்டனர். மூவேந்தர் முற்றுகை பல நாள் நீடித்தும் பாரி பணியவில்லை. அவனது மலையரணும் வலிமை சான்றதாகத் தோன்றியது. எனினும் அம்முடிமன்னர் அரணைவிட்டு அகன்றாரல்லர்.

மூவேந்தர் நிலையைக் கண்டு பாவேந்தராகிய கபிலர் இரங்கினார். அவர் பாரியின் ஆருயிர் நண்பர்-அறிவுசால் அமைச்சர்-அவையணி செய்யும் அருந்தமிழ்ப் புலவர். இத்தகைய கபிலர், முற்றுகையிட்ட மூவேந்தரையும் நெருங்கினார். 'முடிமன்னர்களே! நீவிர் நிலந்தொறும் நிறுத்திய தேர்களை மிகவும் படைத்திருப்பினும் மரந்தொறும் கட்டிய களிறு

களைக் கணக்கின்றிப் பெற்றிருந்தாலும் நுங்கள் படைவலி கண்டு அஞ்சான் பாரி. அவனை நும் போராற்றலால் வெற்றி கொள்ளலாம் என்று எண்ணுவதெல்லாம் வீண்கனவே. நீவிர் எத்துணைக் காலம் முற்றுகையிட்டிருந்தாலும் அரணகத்துறைவார்க்கு வேண்டிய உணவுப் பொருள், உழவர்களின் உழைப்பில்லாமலேயே அம்மலைக்கண் மிகுதியாகக் கிடைக்கின்றன. அங்ஙனம் இயற்கையாகக் கிடைக்கும் இனிய உணவுப் பொருள்கள் நான்கு. அவை மூங்கில் நெல்லும், முதிர்சுவைப் பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும், வளமான மலைத்தேனும் ஆகும். இவையன்றி அம்மலையில் வானத்தே காணும் எண்ணற்ற மீன்களைப் போன்று அளவற்ற வளமான சுனைகள் உள்ளன. ஆகையால் அம் மலையரணுள் வாழ்வார்க்கு ஒரு குறையும் இல்லை. அவ்அரணே உரன்மிகப் படைத்துப் பகைவர் உள்ளத்தை அச்சுறுத்தும் உயர்வுடையது’ என்று பாரியின் பறம்பு மலையரண் அமைப்பையும் ஆற்றலையும் விளக்கினர். கபிலரது வாக்கால் அரணமைப்பு முறை அழகுறப் புலப்படுவதாகும்:

‘அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே;
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே:
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே;
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின், மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே;
வான்கண் அற்று அவன் மலையே; வானத்து
மீன்கண் அற்று அதன் சுனையே; ஆங்கு

மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர்; வாளிற் றூரலன்.'

என்பது கபிலரது புறப்பாடல்.

அரணுக்கு அமைய வேண்டிய எல்லா இயல்புகளும் இனிதின் அமையப்பெற்றாலும் ஒருகால் பகைவரால் தாக்குற்றுச் சிதைதலும் உண்டு. அங்ஙனம் அரண் சிதைந்து அழிந்தவிடத்து, அகத்துறையும் அரசன், அமைச்சர், அறிவாளர், மக்கள் முதலாயினரைப் பகைவர் தாக்கி அழிக்காதவாறு காக்க வல்ல கடமையுணர்ச்சியுடைய வீரர் பலரை, அவ்அரண் கொண்டு விளங்குதல் வேண்டும். அவர்கள் உற்றவிடத்து உயிரையும் வழங்கும் பெற்றியராய்ப் பற்றலரைக் கண்டு பணியாத மறமானம் படைத்தவராய் இருத்தல் வேண்டும் என்று குறித்தார் திருவள்ளுவர்.

'எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடைய தரண்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

அரண் ஒன்றைக் கைப்பற்றக் கருதும் பகை மன்னர் அகத்துள்ளார் புறத்தே போகவும், புறத்து வந்தார் உள்ளே புகவும் முடியாதவாறு தடைசெய்து முற்றுகையிடுவர். அங்ஙனம் முற்றியிருக்கும் போதே அரணைப் படை கொண்டு உடைத்து நெகிழ்ந்த இடத்தைத் தெரிந்து ஒருமுகமாகப் பொருது தாக்குவர். இங்ஙனமன்றி அகத்துறைவாரை வஞ்சனையால் தம் வயப்படுத்தி அரணைத் திறக்குமாறும் செய்வர். இங்ஙனம் பகைவர் செய்யும் மூவகை முயற்சியாலும் பற்ற

முடியாத பெற்றியுடையதே பேரரண் என்று கூறினர் நம் பெருநாவலர்.

> 'முற்றியும் முற்று தெறிந்தும் அறைப்படுத்தும்
> பற்றற் கரிய தரண்.'

என்பது அவர் சொல்லமுதமாகும்.

பெரும்படை திரட்டி வந்த பகைவர் 'இவ்அரணை எவ்விதத்திலும் கைப்பற்றியே தீருவோம்' என்று வீறுடன் முற்றுகையிட்டிருந்தாலும், அகத்துறைவார் அவ்விடத்தினின்று அகலாது புறத்தவர் படையெல்லாம் பாழுற்றுப் புறங்காட்டி யோடுமாறு போர் செய்தற்குரிய வாய்ப்புக்களைப் பெற்றுள்ள அரணே பேராற்றல் உடையது. அனைத்திற்கும் மேலாகச் செயல் திறமை வாய்ந்த சீரிய பேரறிவாளர்கள் பலரை, அரண் தன்னகத்தே பெற்றிருக்கவேண்டும். காலமும் இடமும் தெரிந்து பொருந்திய செயலைப் புரிதற்கு வழிகாட்டும் நல்லறிவாளர்கள் நாட்டிற்கு இன்றியமையாதவர்கள். அவர்கள் இலராயின் அரண் எத்துணை உரனையுடையதாக இருந்தாலும் பயனில்லை என்பார் நம் பழந்தமிழ்ப் புலவர்.

> 'எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
> இல்லார்கண் இல்ல தரண்.'

என்பது வள்ளுவர் சொல்லமுதமன்றோ !

நம் தமிழகப் பெருவேந்தர் தம் மதிற்புற வாயிலில் மகளிர்க்குரிய சிலம்பும் தழையும் பந்தும் பாவையும் தொங்கவிட்டிருந்தனர். 'அடுதல் வல்ல வீரர் அவ் அரணுள் புகுதல் அரிது; ஆடல் வல்ல மகளிர் ஆங்குப்

புகுதல் எளிது' என்ற உண்மையை விளக்கி நின்றன அப்பொருள்கள். இக்கருத்தினை,

> 'செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
> எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்.'

என்னும் பதிற்றுப்பத்துப் பாடல் அடிகளும்,

> 'வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
> பொருநர்த் தேய்த்த போரரு வாயில்.'

என்னும் திருமுருகாற்றுப்படைப் பாடல் அடிகளும் வலியுறுத்துவனவாகும்.